ப்ரஹ்மவித்யா.

ப்ரம்மவித்தியாபத்திரிகை

பிரதி இங்கிலீஷ் மீ௴ ௰௫ உ சிதம்பரத்லிருந்து பிரசுரம் செய்யப்படும்.

புத்தகம் ௧.] ௧௮௮௭௵ பிப்ரவரி மீ௴ ௨௮. [இலக்கம் ௯

தே³யத்³ரவ்யஸூசிகா

ஹிந்துதே³ஶஸ்ய			லங்காயா		
ஸாம்வத்ஸரஸ்ய	௧	௰௨ ,,	௨	௪	,,
ஷாண்மாஸ்யஸ்ய	௧	,, ,,	௧	௪	,,
த்ரைமாஸ்யஸ்ய	,,	௯ ,,	,,	௰	,,
ஸஞ்சிகாயா:	,,	௩ ௬	,,	௪	,,

ஏகமுபந்யாஸ: பா ௨௰௧
குதர்க்காசலகுலிஶப்ரத்யுத்தரம் பா ௨௰௩
மதஸ்ய தத்ப்ரயோஜநஸ்ய தஸ்யாசார்யஸ்ய ச [அநுவ்ருத்த:] பா ௨௰௯
ஸம்ஸ்க்ருதபாஷா [புராணாநுவாத:] பா ௩௰௨
ஆத்மா ஶரீரஞ்ச ,,
ஸ்மார்த்தப்ராஹ்மணாநாமுத்பத்தே: காரணம் பா ௩௰௪
வேதஶாஸ்த்ரதரங்கிணீபாடஶாலா பா ௩௰௫

சந்தா விவரம்

		இந்தியாவிற்கு			இலங்கைக்கு		
௵	1-இ	1	12	0	2	4	0
மீ௴	6-இ	1	0	0	1	4	0
மீ௴	3-இ	0	9	0	0	10	0
காபி	1-இ	0	3	6	0	4	0

ஓர் உபந்நியாசம் பா ௨௰௧
குதர்க்காசலகுலிசத்திற்கு விடை பா ௨௰௩
மதமும், அதின் பிரயோசனமும், அதின் ஆசிரியனும்- [முன்தொடர்ச்சி] பா ௨௰௯
ஸம்ஸ்கிருதபாஷைப்புராணம் பா ௩௰௨
ஆத்மாவும், சரீரமும். ,,
ஸ்மார்த்தப்பிராமணர் உட்பத்தியின்காரணம் பா ௩௰௪
வேதசாஸ்திரதரங்கிணீபாடசாலை பா ௩௰௫

இஃது சிதம்பரம்ப்ரம்மவித்தியா ப்ரேஸ்தலைவரால் பதிப்பித்து வெளிப்படுத்தப்பட்டது.

இத்தேசததார் கவனிப்பு.

இத்தேசத்திலுள்ள கைத்தொழிலாளர்க்குத் தினே தினே வேலையின்றி ஜீவனம் மட்டுப்படுகின்றது. இதற்குக் காரணம் அங்கிலே நாட்டிலிருந்து இத்தேசத்தார்க்கு வேண்டிய நூல், துணி, காகிதம், பென்சல், பென், கத்தி, பிரஸ், மை, கண்ணாடி, பீங்கான், பயர் பாக்ஸ், முதலிய லக்ஷாதி லக்ஷம் சாமான்கள் வந்துவிட்டமையே. முற்காலத்தில் எப்படியாயினும் சோற்றுக்குக் குறைச்சலில்லை. இப்போதோ பிண்டம் பெருங்காயமாய் விட்டது. படித்துத் தேறிப்பாசு செய்து உத்தியோகம் உத்தியோகமென்று எங்கும் அலைந்து திரிகின்றனர். யாவர்க்குமே கவர்னமென்டார் உத்தியோகம் எங்கிருந்து கொடுப்பர்? இந்தியாவிலுள்ள 25. கோடி ஜனங்களுக்கும் இங்குள்ளாரே சாமான் செய்யப் புறப்பட்டால் பிழைப்புண்டாகும். சீமையிலுள்ள 3. கோடி ஜனங்கள் இந்தியாவுக்குச் சாமான் செய்தலினாலும், வர்த்தகம் புரிவதினாலுமே குபேரரானார்கள். இவர்க்கு அவையில்லாமையினாலேயே தரித்திரரானார்கள். ஐரோப்பா கண்டத்தில் கவர்ன்மெண்டாரே முன்னின்று கைத்தொழில் சாலைகள் ஸ்தாபித்து, அதற்குரிய வித்தையையும் கற்பித்து, யந்திரங்கள் அமைத்து ஜனங்களை ஏவிவிட்டதினால், இப்போது இவ்வளவு விர்த்திக்கு வந்தன. இவ்விடத்தில் நமக்கு அன்னிய அரசாயிருப்பதாலும், இங்கு கைத்தொழில் விர்த்தியாவது அங்கிலேய தேசத்தார்க்குப் பிழைப்பு மட்டுப்படுமென்பதினாலும் நமது கவர்ன்மெண்டார் கவனிக்காமலேயிருந்தார்கள். இதைச்சுட்டி மிஸ்டர் கிராண்டப் கவர்னர் நாளில் பத்திரிகைகளும், கிருபநேசரும் காது செவிடுபடக் கூக்குரல்போட்டும் பயன்படவில்லை. இப்படியிருக்க, மிக்கதயாளகுணசம்பன்னரான புதுக்கவர்னர் மிஸ்டர் ராபர்ட்போர்ட் அவர்கள் கைத்தொழிலைப் பற்றியே சிந்தித்துச் சமயம் பார்த்து மகாராணியாரவர்கள் 50. வது வருஷத்து மகோற்சவத்தில் எப்படியாவது முடிக்க வேண்டுமெனக்கருதி, தொகைசேர்ப்பிக்கப்பண்ணி, கைத்தொழில் சாலையும், அதன் வித்தையும் ஸ்தாபிக்க முயன்றார். இதற்குச்சுமார் லக்ஷம் ரூபா வசூலாயிற்று. விஜயநகரமகாராஜா அவர்கள் பதினாயிரமும், ம-ா-ா-ஸ்ரீ சவலை-ராமசாமிமுதலியார் ஸி. ஐ. இ. அவர்கள் பதினாயிரமும், மற்றவர் அவரவர்களுக்கு இஷ்டமும் சத்தியும் எப்படியோ அப்படித்தந்தார்கள். ஷை இருவர் தந்ததே பெரியதொகை, இதில் பிப்ருவரி மீ 16உ வருஷோற்சவத்தில் செலவானதும் சீமை கைத்தொழில் சாலைக்கு அனுப்புவதும் போக மீதி கைத்தொழிற் சாலைக்கு வைப்பார்கள். இந்தத்தொகையில் என்னகாரியம் நடக்கும்? ஜுன் 20 உ மீண்டும் நடக்கப் போகிறது. அதற்குள்ளாக எங்குமுள்ளவர்களும் சகாயம் செய்தால் ஷை சாலை சென்னையில் வைப்பதோடு வெளி ஜில்லா தாலுகாக்களிலும் வைப்பார்கள். இதனாலே தான், நமது தேசத்தார்க்குக் கைத்தொழிலும் வர்த்தகமும் அதிகரித்து, குபேரராவார்கள். இத்தேசத்திற்கு நல்ல காலம் வந்தமையாலேதான், நல்ல கவர்னரும் கிடைத்து, அவராலே க்ஷேமகரமான ஐசுவரியத்தையும் பெறப்பார்க்கிறது. தற்காலம் ஒருகோடிரூபா சேர்ந்தால் போதும். இத்தேசத்தார் இது விஷயத்தில் நன்றாய் ஆலோசிக்க வேண்டும். அவரவர்க்கு இயன்ற மாத்திரம் தரலாம். கொடாதவரைப் பலாத்காரம் செய்வாரில்லை. ஒவ்வொரு ஊரிலும் இதுவிஷயமாக அபிமானமும், ஏழைகளிடத்துப் பக்ஷமுமுள்ளவர், சிறிது இடுப்புக்கட்டிக்கொண்டு முயன்று நிதிசேகரிக்க வேண்டும்; இதுதான் சமயம். கவர்ன்மெண்டார் மனசில் படுவதே கஷ்டம், பட்டும் பயனற்றுப் போனால் மற்றொரு கவர்னரால் இது ஆவதில்லை. ஜனங்களே! நன்றாய்ச் சிந்தியுங்கள்! நமது தேசத்துப் பணக்காரர்க்குக் காரியம் இன்னதென்று தெரியவில்லை; எத்தனைதான் எடுத்தெடுத்துக்கூறினும் உறைப்பதில்லை. நாளை யமனுக்கு ஆளாய்ப் போகும் அக்காலத்தும் ஒருவர்க்கும் ஒருகாசும் தராது பேச்சற்றுப் போனால், அப்போது அனுபவிப்பர் யார்? பிறகு, அவர்க்கும் நமக்குமுள்ள சம்பந்தம் யாதெனச்சிறிது ஊன்றிப் பார்ப்பரேல், ஜனோபகாரமாக ஏதேனும் தருவர். அப்படியோசிக்கக் கல்வியும் அறிவுமில்லையே, என் செய்வது? இதுநிற்க,

இவ்விடத்தில் செய்யப்போகிற சாமான்களாவன

நூல் நூற்றல், துணி நெய்தல், சீட்டி அச்சடித்தல், சாயம்போடல், தோல் பதஞ்செய்தல், சரிகைதிரித்தல், காகிதம் பென்ஸல் மை கண்ணாடி பீங்கான் முதலிய அனேகவஸ்துக்கள் உற்பத்திசெய்யலாம். சிறிது சிறிதாகச் சேரும் பொருளுக்குத்தக்கபடி ஆகும்.

இதற்குச் சிலஅங்கிலேய கிறிஸ்து பாதிரிமார் கூறுவதாவது.

“கைத்தொழில் சாலை ஏற்படுத்தினால் பிழைப்புண்டாகும், பிறகு, ஏழைகளாயிருப்பதில்லை, கஞ்சிக்கில்லாவிட்டால் தான் கிறிஸ் வராவார்கள், கிறிஸ்துமதம் பலப்பட்டு கிறிஸ்து ஜனங்கள் பெருத்தால் தான் அங்கிலேய கவர்ன்மெண்டு நிலைக்கும், கவர்ன்மெண்டு நிலையானால்தான் அங்கிலேயர்க்கு உத்தியோகத்தாலும் வர்த்தகத்தாலும் கைத்தொழிலாலும் ஜீவனமுண்டாகும், ஆதலால், கைத்தொழில் சாலை ஏற்படுத்தல் தகுதியன்று, ஏற்படுத்தினாலும் கிறிஸ்தவர் அதற்குப்பணம் தரப்படாது முதலியவையே. இதனால் அவர்கருத்தை உணருங்கள்! இத்தேசத்தாரைக் கிறிஸ்தவராக்குவது தமது தேசத்தார் பிழைப்பினிமித்தமெனத் தெள்ளத் தெளிய விளங்குகின்றதல்லவா? பாதிரிமார், இத்தேசத்துப் பணக்காரரை மோசத்தாலும், தரித்திரரைச் சோற்றாலும் கிறிஸ்துவராக்கச்செய்யும் முயற்சியிவ்வளவெனக் கூறற்பாலதா? நம்மவர், இதைப்பற்றியோசிக்கின்றனரா? கபோதிகளாகவிருக்கின்றனரே; பலஜாதி மதஸ்தரும் கட்டுப்பாடாயிருந்து கைத்தொழிற் சாலைக்குப் பெருநிதிசேகரித்து, ஜனங்களுக்கு கொடுத்து ஜீவனத்தையுண்டுபண்ணி, ஒருவரும் கிறிஸ்து மதத்திற்குச்செல்லாவண்ணம் சுயமதத்தைப் போதித்து, எங்கும் தேசக்ஷேம விஷயமாகவும் மதவிஷயமாகவும் பிரசங்கம் புரிந்து, கிறிஸ்தவரானவரை மீண்டும் சுயமதத்தில் திருப்பி, ஒற்றுமையை உண்டாக்கி, இன்னும் இவை போன்று பற்பல காரியங்கள்செய்யவேண்டியதவசியமன்றோ? பிரபுக்கள் என்னசெய்கின்றார்கள்? மதாபிமானிகளெங்கே? பணக்காரர்க்கு இதைவிடச் செய்யும் கிருத்தியம் யாது? பிரசங்கிகள் இப்போது சும்மா

ப்ரம்மவித்தியா

அனுபந்தம்

புத்தகம் ௧.] ௧௮௮௭ ௵ பிப்ரவரி ௴ ௨௮ [இலக்கம் ௯

சிதம்பரமும் ஜூபிலித்திருநாளும்

ஐயா,—சென்ற பிப்ரவரிமீ 16வ நமது இந்தியா சக்கிரவர்த்தனியார் அரசாட்சியின் ஐம்பதாவது வருஷபூர்த்தி உற்சவம் இந்த ஊரில் மிகச்சிறப்பாய் நடந்தேறியது. ஒவ்வொரு ஜனங்களும் மிகவானந்தத்தோடு ஷை உற்சவத்தைக் கொண்டாடினார்கள். இந்த சிதம்பரத்தில் அன்றைக் குழந்தை முதல் முதியோர் வரையில் இடைவிடாது நமது சக்கிரவர்த்தினியார் அவர்கள் பெபரைச் சொல்லிக்கொண்டே இருந்தார்கள் அன்று ஊரெல்லாம் சலங்கள் தெளித்து திருக்காலமிட்டு தோரணம் கட்டி சிங்காரிக்கப்பட்டிருந்தது.

அன்று காலை 6 மணிக்கு இந்தவூரில் உள்ள எல்லாக் கவர்மெண்டு உத்தியோகஸ்தரும் மற்றைய கனவான்களும் இந்த உற்சவம் நிறைவேற்ற வேண்டிய சப்கமிட்டியாரும் ம-ா-ா-ஸ்ரீ தாசில் வராகையங்கார் அவர்கள் கிரகத்தில் கூடி மகாகனம்பொருந்திய நமது சக்கிரவர்த்தனியாருக்கு மரியாதையாய்ப்பல வெடிகள் தீர்ந்து ஊர்கோல வரிசையாய் சின்னமேளம் பெரிய மேளம் முதலிய திருக்கோலங்களுடன் வீதிப் பிரதக்ஷணமாய் வந்து முதலில் நாட்டுக்கோட்டை ம-ா-ா-ஸ்ரீ ரா. ம-சு- ராமஞ்செட்டியார் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட வேதசாஸ்திர தரங்கணி யென்னும் சம்ஸ்கிருத பாடசாலைக்குச் சென்றார்கள். அங்கு சென்று அப்பாடசாலையில் படிக்கும்மாணாக்கருள் ஒருவரான ஹாலாசியநாத சாஸ்திரி யென்பவர் வேண்டுகோளின்படி சுமார் அரை மணி காலம் அவரியற்றிப்படித்த நமது காருண்ணிய சக்கிரவர்த்தினியாரவர்களின் வந்தன பத்திரிகையைக் கேட்க ஒப்புக்கொண்டார்கள். அதேசமயத்தில் அப்பாடசாலைத் தலைமை உபாத்தியாயராகிய ஸ்ரீ மான்வைத்தீசுவர சாஸ்திரிகள் அவர்கள் கேட்டுக்கொண்டபடி சிதம்பரம் ப்ரம்மவித்தியா பத்திராதிபரான கும்பகோணம் பிர்ம்மஸ்ரீ ஸ்ரீநிவாசசாஸ்திரிகளவர்கள் அக்கிராசனாதிபதியாக வீற்றிருக்க, பல சுதேச கனவான்களும், கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களும், மற்றும் சில சுதேச பண்டிதர்களும் கூடிய மகாசபையின்கண் நமது சக்கிரவர்த்தினியாரவர்களுடைய மேலான கனத்திற்குக் கீழ்க்கண்ட ஹாலாசியநாத சாஸ்திரிகளவர்களால் வந்தனோபசார பத்திரிகை அளிக்கப்பட்டது. உடனே அக்கிராசனாதிபதியாகிய ப்ரம்மவித்தியா பத்திராதிபர் எழுந்து மேற்குறித்த சம்ஸ்கிருத வந்தனோபசார பத்திரிகையின் பொருளைத் தமிழில் நன்குவிளக்கி அப்பாடசாலையின் வரலாற்றையும் பிள்ளைகளின் திறமையையும் சிறிதுரைத் தெடுத்து பின்னும் அப்பாடசாலை வரவேண்டிய சீர்திருத்தங்களைக் குறித்தும் சில விஷயங்களை எடுத்துரைத்தார். உடனே சிதம்பரம் டிஸ்டிரிக்கட் முன்சீப் மல்லாரிராவ் பி. ஏ. அவர்கள் எழுந்து சபையாரைநோக்கி இங்கிலீஷ் பாஷையில் சம்ஸ்கிருத பாஷையின் பெருமையைப் பற்றியும் ஷை ஸ்ரீநிவாசசாஸ்திரியவர்கள் கூறினபடி இப்பாடசாலையை சீர்திருத்தத்துக்குக் கொண்டுவர வேண்டியதைப்பற்றியும், அவ்விதம் செய்வது நமது காருண்ணிய சக்கிரவர்த்தினியவர்களுடைய சந்தோஷத்திற்கு இடமாகுமென்று தாம் எண்ணுவதாயும், தமது மேலான அபிப்பிராயத்தை வெளியிட்டனர். பிறகு வந்தனோபசார பத்திரிகை யளித்த ஹாலாசியநாத சாஸ்திரிகளைக்குறித்தும் அதற்குப் பொருளுரைத்து மற்றும் சில விஷயங்களை யெடுத்து உபன்னியசித்த பத்திராதிபரைக் குறித்தும் நமது விஷயத்தை அனுமோதித்த ம-ா-ா-ஸ்ரீ முன்சீப்தார் அவர்களுடைய மேலான அபிப்பிராயத்தைக் குறித்தும் வைக்கீல் என். ஸ்ரீநிவாஸாசாரியார் மிகப் புகழ்ந்து பேசினார். உடனே படிக்கும் பிள்ளைகளுக்கு சக்கரை வாழைப்பழம் புஷ்பம் முதலானது மளிக்கப்பட்டன. பிறகு அவ்விடம் விட்டு அதே வீதியில் ம-ா-ா-ஸ்ரீ வெ. ச. சபாபதிச் செட்டியாரவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட ஸம்ஸ்கிருத பாடசாலையை நோக்கி யெல்லோரும் முற்கூறிய கோலத்துடன் செல்ல அங்கும் அவ்விடத்தில் படிக்கும் மாணாக்கருள் ஒருவர் நமது மகாராணி அவர்களின் ஆக்ஷியின் பெருமையை ஓர் செய்யுளிலடக்கி மிகத்தெளிவாயுரைத்தனர். பின்பு அவ்விடத்திலும் கீழ்க்கண்ட பத்திராதிபர் அங்கு படிக்கும் பிள்ளைகளின் திறமையைக் குறித்தும் அவ்விடத்தில் படிக்கும் பிள்ளைகளின பாஷாஞானத்தைப்பற்றி தாம் செய்த விரண்டு பரிக்ஷைகளால் மிக வியப்படைந்ததாகவும் இனி அப்பாடசாலையில் செய்யவேண்டிய பல விஷயங்களில் அப்பாடசாலையின் போதகாசாரியரான ஸ்ரீமான் தக்ஷிணாமூர்த்தி சாஸ்திரியின் விடாமுயர்ச்சியையும், இவ்வித சௌரியங்கள் நமது மகாராணியின் ஆக்ஷியின் பெருமையென்னும் விரைவில் சுருக்கமாய் சுமார் பத்து நிமிஷம் பேசினார் பிறகு பிள்ளைகளுக்கு முற்பாடசாலை போலவே மரியாதைகள் செய்யப்பட்டன. பிறகு பச்சயப்பா ஹைஸ்கூலுக்கு அனைவரும் சென்று அங்கும் பிள்ளைகளுக்கு முற்கூறியவாறு செய்தார்கள். அங்கும் அப்பாடசாலைப் பிரதான உபாத்தியாயரான வரப்பிரசாத சாமினாத ஐடாவல்லபர் பி. ஏ. அவர்கள் இங்கிலீஷ் பாஷையில் சிதம்பரம் ஜுபிலி சப்கமிட்டியார் யேற்படுத்திய ஏற்பாட்டையும் நமது மேன்மை தங்கிய காருண்ணிய சக்கிரவர்த்தினியவர்களது பெருமையையும் அவர்களுக்கு இந்துதேசத்தார் அதிலுள்ள அன்பையும் யெடுத்து வியந்து பேசி வந்தவர்களுக்கு வந்தனமளிக்க, முற்கூறிய பத்திராதிபரெழுந்து படிப்பின் பிரயோசனம், ராஜபக்தி, சுதேச விசுவாசம், பகுத்தறிவு, பொது நன்மை இவைகளே என்றும் அவ்வித விஷயங்களைத் தவறாமல் உங்கள் படிப்பின் பிரயோசனமாக்கிக் கொள்ளவேண்டுமென்றும் படிப்பின் பிரயோசனம் பணம் ஒன்றே யல்லவென்றும் ஒருவாறு [illegible] ஷயத்தை நமது ரிப்பன் பம்பாய்மா நகரத்தில் எடுத்[illegible] சித்தார் என்றும், தற்காலம் நடக்கும் உற்சவ[illegible]

சவிசுவாசத்திற்கே பெரிய அடையாள மென்றும் சிலகால் பேசினர். அதைக் கேட்டு வைக்கீல் ஸ்ரீநிவாஸாசாரியாரும் ஆமோதித்தார்கள் ஹெட்மாஸ்டர் அவர்களிடம் அனைவரும் அனுமதிபெற்று அவ்விடம் விட்டு தெற்குவீதியில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கெவர்மெண்டு பெண்கள் பாடசாலைக்குச் சென்றார்கள்; அவ்விடத்தில் பாடசாலை முதல் உபாத்தியாயர் கேட்டுக் கொண்டதின் பேரில் பெண்களுக்கு இன்றியமையாத சில விஷயங்கள் விவேகத்தாலன்றிக் கூடாதென்றும் சில விதமான படிப்பு அவர்களுக்கு அத்தியாவசியக மென்றும் மற்றவர்களுடைய பாலியம், யௌவனம், வார்த்திபம் இம்முக்காலத்தில் நடக்கவேண்டிய சில நல்லொழுக்கங்களைக் குறித்தும் வெளி நடையில் அப்பெண் குழந்தைகளை நோக்கி மேற்கண்ட பத்திராதிபர் சிறிது பேசினார். குழந்தைகளுக்கும் சந்தனம் புஷ்பம் வழங்கப்பட்டது; பிறகு அவ்விடம் விட்டு முற்கூறிய கோலத்துடன் மேலவீதியில் யாழ்ப்பாணம் நல்லூர் ம-௱-௱ ஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் ஸ்தாபித்த சைவப்பிரகாசபாடசாலைக்குச் சென்றார்கள். அவ்விடம் பாடசாலையின் பிரதான உபாத்தியாயர் வேண்டுகோளின்படி சுருக்கமாய் நாவலரது நல்லொழுக்கத்தையும் விடாமுயற்சியையும் தேசபாஷை, தேவபாஷை, ராசபாஷை இம்மூன்றும் நமக்கு அவசிய மென்பதையும் இம்மூன்றிற்கும் தனித்தனியே பாடசாலை அமைந்திருக்கின்றன வென்றும் அப்பாடசாலைகள் விருத்திக்கு வரவேண்டியது நமது முயற்சியாலென்றும், இப்பரதகண்டத்தின் பாஷைகளில் வடமொழி தென்மொழி இவ்விரண்டுமே அனாதிகளான பாஷையென்றும், இப்பாஷைகளைக் கற்கும் விஷயத்திலுள்ள சௌகரியங்கள் நமது மகாராணி அவர்களுடைய ஆளுகையில் ஏற்பட்டன வென்றும் வியந்து பேசினர்- பிள்ளைகளுக்கு முன்போலவே பழம் முதலியவை அளிக்கப்பட்டன- அவ்விடம் விட்டு முனிசிபாலிட்டி ஸ்கூலடைந்து அவ்விடத்தில் படிக்கும் மகம்மதீயக் குழந்தைகளுக்கு ராஜபக்தி, படிப்பின் மேன்மை, இவைகளைக் குறித்து ஹஜாத்ஸைதுஸென் சாகிப் அவர்கள் செய்த ஒரு சிறு உபந்நியாசத்தை மேற்கண்ட ஸ்ரீநிவாஸாசாரியார் யெடுத்து மொழி பெயர்க்கக் கேட்டு ஆனந்தித்து குழந்தைகளுக்கு முன்போலவே நடத்தி அவ்விடம் விட்டு வெகு விநோதமாய் பச்சயப்பா உப பாடசாலைக்குச் சென்றனர். அவ்விடம் முற்கூறிய பச்சயப்பா உபபாடசாலை ஹெட்மாஸ்டர் இளமையில் படிக்கவேண்டியதைக் குறித்தும் பச்சயப்ப முதலியார் தருமத்தைக் குறித்தும், பலவாறு வியந்து இங்கிலீஷ் பாஷையில் பேச உடனே மேற்கண்ட பத்திராதிபரும் மேற்படியார் தாற்பரியத்திற்கிணங்கி பாடசாலைகள் யெல்லாவற்றையும் ஆதரித்தல் ஆவசியமாயினும் தன்னறிவில்லாமற் பிறரறிவு கொண்டு பிழைக்கும் இக்குழந்தையின் பாடசாலை முதலிலா தரிக்கத்தக்க நிலைமை பெற்றதென்றும் யிளமையிற் கற்பது நலமென்றும் இப்பாடசாலையில் படிப்பதில் சௌகரியங்கள் அனேகமேழைகளுக்கும் கிடைக்கு மென்றும் பேசி அ[illegible]விதமாக ஆமோதிக்கப் பெற்று பிறகு பிள்ளைகளை உ[illegible] அவ்விடம் விட்டு ம-௱-௱- ஸ்ரீ தாசில்தாரவர்[illegible]த்திரும்பியும் வந்து சேர்ந்து அதுவரையில் நட[illegible]தச் சரியாய் நடத்தினதற்காகப் பலரளிக்கும் வந்தனங்களைப் பெற்று சப்கமிட்டியார் அவர்களின் உத்தரவின் பேரில் எல்லோரும் கலைந்து கிரகங்களுக்குச் சென்றார்கள். பிறகு ஆங்காங்கு பலசாதி ஏழைகளுக்கும் விஸ்தாரமாய் அன்னங்கள ளிக்கப்பட்டன. சுமார் மூன்று மணிக்குச் சிதம்பரம் தேவாலயம ஆயிரக்கால் மண்டபத்தில் ஒரு மகாநாடு கூடியது அவ்விடம் முதலில் சிதம்பரம் சப்ரிஜிஸ்தார் ம-௱-௱- ஸ்ரீ இராமச்சாதிரராவ் பி-ஏ- அவர்களால் சென்னை ஜூபிலிக் கமிட்டியார் அனுப்பிய இங்கிலீஷ் வந்தனோபசார பத்திரிகை படிக்கப்பட்டு ம-௱-௱- ஸ்ரீவரப்பிரசாத சாமிநாதஜடாவல்லபரவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப் பட்டு சிலபிரதிநிதிகளால் கையொப்பமிடப் பட்டது; பிறகு உள்ளூர் ப்ரம்மவித்தியா பத்திராதிபர் எழுந்து இந்துக்களுக்கு இராச விசுவாசம் சுவபாவ மென்றும, மகாராணி அவர்களின நற்குண நற்செய்கைகளையும், குடிகளுடைய விசுவாசத்தையும் நாமறியவேண்டுவது அவசியமென்றும் சிறி தெடுத்துரைத்து, மகாராணி அவர்களின் சரித்திரத்தையும் எடுத்து சுருக்கமாய்ச் சொல்லி 1858 வருடம் கம்பெனியாரிட மிருந்து நமது இந்தியா ராச்சியத்தைக் கைக்கொண்ட பொழுது மகாராணி அவர்கள் நமக்காக அனுப்பிய ஆஞ்ஞாபத்திரிகை மொழிபெயர்ப்பைப் படித்துக் காட்டி அதனால் நமது சக்கிரவர்த்தினியின் கருணைப் பெருமையையும் நம்மிடமுள்ள விசுவாசத்தையும், நமக்கும் அவருக்குமுள்ள சம்பந்தத்தையும், சுவதந்திரங்களையும் பற்றி விரிவாய்த் தமிழிலும் சம்ஸ்கிருததிலும் உபந்நியசித்து சில பண்டிதர்களின் கொள்கையை அனுசரித்து சம்ஸ்கிருத பாஷையிற்றானே ஒரு வந்தனோபசாரப் பத்திரிகையைப் படித்தார். உடனே மேற்கண்ட பத்திராதிபர் சகோதரர் பட்டஸ்ரீ நாராயணசாஸ்திரி யென்பவர் எழுந்து மகாராணி அவர்களின் நன்மைகளைக் குறித்து சம்ஸ்கிருதம், திராவிடம் இரண்டுபாஷைகளிலும் உபந்நியசித்து உள்ளூர் பாடசாலை வித்துவான்களாகிய ஸ்ரீமான் தட்சிணாமூர்த்திசாஸ்திரிகள் வைத்தீசுவர சாஸ்திரிகள் எழுதியதும் மகாராணி அவர்களின் ஸ்தோத்திரமுமாகிய சில செய்யுட்களை பொருள் படுத்தி எடுத்துரைத்தார். பிறகு போலீஸ் இனிஸ்பெக்டர் ஹஜாதசைத் உசேன்சாகிப் அவர்கள் ஹிந்துஸ்தானியில் ஓர் வந்தனோபசார பத்திரிகையும் படித்தார். பிறகு யாழ்ப்பாணம் சபாபதி நாவலர் அவர்கள் ராஜவிசுவாசத்தைக் குறித்துச் சிறிது உபந்நியசித்தார். பிறகு குஸ்தி, சிலம்பம், ஒவ்வொரு தேவாலயங்களிலும் அபிஷேகம், அருச்சனை பிரார்த்தனை முதலியவைகள் வெகு விமரிசையாய் நடத்தப்பட்டு கோபுரங்கள், வீதிகள், மற்றெல்லா விடத்திலும் வெகு அலங்காரமாய் தீபங்களிடப்பட்டு சதுர், பாட்டு, பின்னல்க் கோலாட்டம் முதலிய பல விநோதங்களுடன் ராத்திரி சுமார் 11 மணிவரையில் வாணவேடிக்கை செய்து சந்தனம் தாம்பூலம் புஷ்பங்கள வழங்கி பன்னீர் பொழிந்து வெடிகள் தீர்த்து உற்சவத்தை நடத்தி முடித்தனர். எங்கும் இம்மகோற்சவம் சிறப்பாய் நடந்திருக்குமாயினும் இந்நகரில் யெல்லாஜாதியாரும் கண்டு களிக்கத்தக்க யிப்பேர்க்கொற்ற மகோற்சவம் இதுவரையிய் கண்டதில்லையெனக் கொண்டாடப்பட்டது மகாராணி அவர்களின் ஆள்கை நீடூழிவாழ்க.

சம்ஸ்கிருத வந்தனோபசாபத்திரிகையை இதனடியில் காண்க.

[illegible]

[illegible]

ஶ்ரீ:

[illegible]

ஶ்ரீ:

[illegible]

"சுஜநோல்லாஸன்"

இப்பெயர் கொண்ட பத்திரிகை சிலவாரங்களாய் தஞ்சைமாநகரினின்றுவெளிவரக்கண்டு மகிழ்ந்தேன்- இதுவிஷயமாய் ஒருவாறுசிலவாரங்களுக்கு முன்சென்ற சுதேசாபிமானிப் பத்திரிகாசாரியார் எழுதியபடி இப்பத்திரிகையில் ஈடுவதுஆயினும் இதை நடத்தப் புகுந்த பத்திரிகாசாரியர் மிகுந்த விடாமுயற்சியால் இப்பத்திரிகை நடத்தப் பரமகிருபாநிதியான பரமேசுரன் அருள் பெறுவாரென்றும், நடுநிலைமையால் சுதேசிகளுக்கும் க்ஷேமத்தைத் தரத்தக்க ஒவ்வொரு விஷயத்தையும் எழுதி வருவாரென்றும் தென்னாட்டில் மிகச்சீர்திருத்தமும் நாகரீகமும் கல்விப்பயிர்ச்சியும் பெற்றுபெரும் புகழடைந்து தக்க ஆதீனங்களாலும் அநேக பெருத்த மிராசுதார்களாலும் மற்றும் அநேக வைதிக வித்துவான்களாலும் நிரைந்தும் தற்காலம் ஆங்கிலேய பாஷைப் பயிர்ச்சியிலும் மேன்மை பெற்றும் நீர்வளமும் நிலவளமும் ஒப்பிலாது நிறைந்த தஞ்சாவூர் ஜில்லாவில் ஒரு பத்திரிகையும் இல்லாமலிருப்பது அவ்விடத்துக்கு மிகவும் ஓர் குறைவு யென்று நன்கு மதித்து அக்குறைவை விலக்குவாரென்றும் நாம் எதிர் பார்க்குறோம். அந்த ஜில்லாவின் கீழ்நாட்டின் (அதாவது நாகையில்) உதித்த சுதேசநேசன் என்னும் பத்திரிகை சொற்ப தினங்களிலேயே நின்றுபோய்விட்டது. அவைகளுக்குக் குறைவு வந்த காரணம் யாதெனில், முக்கியமாய் ஆதரிப்பவர் அநேகர் கைவிடுவதும், எழுதுவோர் அனுவசியமான சங்கதிகளால் பத்திரிகையை நிரப்புவதுமே.

இப்பொழுது பிரசுரமாகும் இப்பத்திரிகையிலோ விஷயங்களை அனைவரும் அறியவேண்டியதும் அவசியமுமானவைகளே. இப்பத்திரிகையை ஆதரிக்கத்தக்க கனவான்ளுக்கு மனமிரங்கி விடாமல் ஆதரிக்கும்படியும், தஞ்சைநகரின் அருகில் வசிக்கும் ஜனங்களுக்கு ஒருபேரும் யசஸ் பெருக்கவும், இப்பத்திரிகை நீடூழி வாழவும் பரமன் அருள் புரிவாராக. தம்டால் இப்பத்திரிகையை யனுப்பிவரும் பத்திராதிடருக்கு நாம் மிகநன்றியுள்ளவராயிருக்கிறோம். பத்திராதிபர்-

வேலூர் ஸ்ரீலோகரஞ்சனி-

இப்பெயர் கொண்ட ஓர் மாதாந்திரப் பத்திரிகை வேலூரிலிருந்து ம- ௱- ௱- ஸ்ரீ சி. சோ. அப்புமுதலியார் அவர்களால் நடத்தப்பட்டு வருகின்றது. அது நம்மிடம்வர சஞ்சிகைகளைப்பார்த்தோம் அதுமுன்னரே அதற்காக ஏற்பட்ட பிரசித்த பத்திரிகைக்கிணங்கத்தக்க விஷயங்கள் உள்ளதாயே வெளிப்படுகிறது. ஆயினும் அதில் எழுதிவரும் விஷயங்கள் நன்கு இந்து சாஸ்திரங்களைக் கற்றுணர்ந்த வித்துவான்கள் பார்த்து ஆனந்திக்கவேண்டியவை- ஆனாலும் இதற்குமுன் இதே ஊரில் நடந்துவந்த வேலூர் ஜநாநுகூலநி என்னும் பத்திரிகை அடைந்த ஒரு கதியை சிந்தித்து மனம் நடுக்குகின்றது இப்பத்திரிகை அதுபோல் ஆபத்துக்கு அகப்படாமல் கட்டாயமாய் பரமேசுரன் அருளால் நல்ல கதியை அடையுமென்று பிரார்த்திக்கிறோம். முதலியாரும் விடாது முயன்று வரவேண்டும் இதற்கு அனுடந்தமாய் (அவடிதபகடி) என்று ஒரு விநோதப் பத்திரிகை தொடங்கப்பட்டிருக்கிறது. இவ்விரு பத்திரிகைகளையும் ஒருவரே நடத்துவது மிகக்கடினம் இது விஷயத்தில் சிரமம் எடுத்துக்கொண்ட நமது நண்பர் முதலிய கையொப்பக்காரர்கள் கைவிடாது காக்க அவர்களுக்குப் பரமேசுரன் அருள் புரிவாராக. முன் பத்திரிகையின் மாதிரியைக் கண்ட மாத்திரத்தில் இவ்வளவு இது விஷயம் எழுதப்பட்டது. இப்பத்திரிகை நம்மிடமனுப்பிய பத்திராதிபருக்கு பரமேசுரன் கருணைமாரி பொழிவார் என அவரது திருவருளைப் பிரார்த்திக்கிறோம். பத்திராதிபர்

ப்ரஹ்மவித்யா.

ப்ரம்மவித்தியாபத்திரிகை

பிரதி இங்கிலீஷ் மீ ஙயஉ சிதம்பரத்லிருந்து பிரசுரம் செய்யப்படும்-

புத்தகம் க.] கஅஅஎ(ஹு) பிப்ரவரி மீ உஅ- [இலக்சம்- கூ

[illegible]

[illegible]

[illegible]

உ

ஓர் உபந்நியாசம்

மாட்சிமை தங்கிய வஞ்சிநாட்டின் கண் மகாராணி அவர்களின் மணவாளனாகிய ஸ்ரீமான் ஹிஸ்ஹைநஸ் வலியகோவில் தம்பிரான் எப். எம். யு. அவர்கள், திருவனந்தபுரத்தில் ஸதாபிக்கப்பட்டிருந்த சாரஸ்வதஸமாஜத்தில் மேற்றிசையார் சருத்திற்கியைய ஜாதி விஷயத்தைக் குறித்துச்செய்த உபந்நியாசம் வருமாறு

சீர்பெற்ற இச்சாரஸவதஸமாஜத்தில் நாம் இ[illegible]றுசொல்லப் போகும் பிற சங்கத்திற்கு சாதி விஷயமென்[illegible] ஸாமாஜிகர்கள் அறிந்த விஷயமல்லவா? இங்கெடுத் துரைத்த சாதியென்னும் பதம் தர்க்கசாஸ்திரத்தில் சாமான்னியப் சாதி யென்றும் இருவகைச்சொற்களால் சொல்லப்படும் சாதி யல்ல, அந்த சாதியை எடுத்து விசாரித்தால் ஜாதி (தன்மை) எனவும் வியக்தி (பொருள்) எனவும் இருவகை வழிகளை அனுசரித்து தாரதம்மியம் விசாரிக்க ஏற்படவேண்டிவரும்; அவ்விதம் பிரசங்கம் செய்வது வித்துவான்களுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்குமாயினும், சபையிலுள்ளோர் எல்லோரும் ஆனந்திக்கவும் அநேக சாஸ்திரங்களைக் கற்றறியாத எம்போலிகள் எடுத்து உபன்னியசிக்க முடியாதும் அல்லவா? ஆகையால் இப்பொழுது நாம் இங்கு தொடங்கியபடி எடுத்து உபன்னியசிக்கப் போவது சாதியைப்பற்றி யென்றால் உலகத்தார் வர்ணங்களென விவகரிக்குஞ் சாதியைப்பற்றியே என்றறிக. இவ்வித உபன்னியாசத்தினாலாவது நாம் இந்தச் சபையை ஆனந்திக்கச் செய்ய வல்லமை யற்றவரேனும் சுருதி ஸமிருதி, இதிஹாஸம், புராணம், மற்றுமுள்ள சாஸ்திரங்கள் இவைகளில் உழைத்து உண்மையை வெளியிட்ட யூரோப் தேசத்தாரான மாக்ஸ்முலர் முதலிய வித்துவான்களால் எழுதப்பட்ட புத்தகங்களைப் படித்து அவைகளைக் கொண்டும் இவ்விடம் வந்திருக்கும் பெரியோர்களனுக்கிரகத்தாலும், இந்தப் பிரசங்கத்தை இவ்விடம் தொடங்குகின்றேன்.

ஜாதி யென்பது யாது?

[illegible]

[illegible]

இந்தப்பதம் நாம் கீழ்ச்சொல்லிய பொருளைக் கொண்டே எங்கும் வழங்கப்படுகிறது. இங்கிலீஷ் ராச்சியபாரத்தைச் சேர்ந்த ஒவ்வொரு பிரபுக்களின் கூட்டங்களிலும், இச்சொல் அடிக்கடி வழங்க யாம் கேட்டதுண்டு; இதற்குப்பரியாய நாமங்கள் இங்கிலீஷ பாஷையிலும் மற்றப் பாஷையிலும் அனேகம் கிடைக்கும் இந்த சாதி யென்னும் விவகாரம் இத்தேசத்தால் மாத்திரம் உள்ளதல்ல நெடுநாளாய்க் குடியேறிப் பழைய தேசமெனச் சொல்லத்தக இஜிப்து தேசத்திலும், பாரசீகதேசத்திலும் மேலும் இப்பூமண்டலத்திற்கு ஓர் பேரணியாய் விளங்குவதும்எல்லாவித சீர்திருத்தங்களும் உள்ளலண்டன் நகரத்திலும் சதாசாரங்களையும், நீதிகளையும் வெளியிடவந்த சில கிரந்த கர்த்தர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டதே. இச்சாதியின் நிலைமை சிறிது காலங்களுக்கு முன் நானு சாகிப்அவர்களைக் காரணமாய்க் கொண்டு உண்டான கலகத்திற்கும் சாதி யல்லவோ காரணம் அப்பொழுது சமீபத்தில் படைத்தலைவர் நிழல் பட்டதால்தமது சமயங்களுக்கு ஆசாரம் குறைந்ததென்றெண்ணி சமைத்திருந்த அன்னம் முதலிய வற்றை அக்கினியில் சிலர் கவிழ்தார்களாம். துபாக்கிக்காக ஏற்படுத்தப்பட்டிருந்த சில தோட்டாக்களில் ஏதோ சில ஊன் சம்மந்தித்திருப்பதாய் இதனால் தங்களுக்கு சாதி கெடுமென்றும் அதிலும் தாங்கள் இவ்வுலகம் விட்டு நீங்குவதே உசிதமென்றும்எண்ணி கொடிய ஸாகஸம் செய்தார்கள்; கிறிஸ்து சமயத்தில் மற்றவரை சேர்க்க முயன்றவரும் ஐரோப்பாப் பாதிரிமார் கொள்ளும் கொள்கைக்கு விரோதமாய் சாதியையேகாரணமாக யெவ்விடத்திலும் தூற்றுகிறார்கள்; நம்மவருள் தேசாபிமானியான சிலரும் இத்தேசம் பிறர் வசப்பட்டதற்குக் காரணம் சாதி யென்றே சொல்லுகின்றனர். மற்றும்சிலசுரோத்திரிய பிராமணர்கள் நமது தேசம் வெகுகாலமாய் கொடுங்கோன் மன்னர்களின் ஆளுகையிலகபபட்டது நமது முன்னோர் கொண்ட சாதி ஆசாரங்களை விட்டதினால் உண்டான தெய்வ கோபத்தின் பயனென்றும் கூறுவாருளர். ஒன்றே பற்பல பயனையுண்டாக்கும், காரணமாய், பற்பல பொருளைக் கொடுக்கும் பதத்தின் பொருளாயும், ஒவ்வொருவர்ஒவ்வொரு விதம்எடுத்துக்கொள்ளத்தக்க நிலைமையிலு மிருப்பது நன்றாகவிளங்கிய தல்லவா? இதுவும் ஒருபெரிய ஆச்சரியமல்ல; நெடுங்காலமாய் இவ்விந்து தேசத்தில் சாதிகள் பல விருந்தன வென்பது திண்ணம். சொற்கள் காலஞ்சென்றால் பொருள் மாறுவது உசிதமே மூவாயிரம் வருஷ காலத்திற்குமுன் கபடமற்று நீதி ஓங்கி சுகமடைந்த நமது முன்னோர் இத்தேசத்தில் குடிகளாயிருந்த காலத்தில் சாதி என்னும் பதத்திற்கு யெப்பொருள் வழங்கியதோ அதற்கு முற்றிலும் விரோதமாய் இப்பொழுது வழங்கி வருவது எல்லோருமறிந்த விஷயமே. யூரோப் தேசத்தில் சுவதந்திரம், வெகுமானம், அவகாசம், அதிகாரம் முதலிய சப்தங்களுககு அடிக்கடி பொருள் மாறிவந்தது அவ்த்வதேசத்து கிரந்தக்காரர்கள் புஸ்தகங்களைப் படித்துப் பார்த்தால் நன்கு விளங்கும் இந்த யூரோப்தேசத்துச் சரித்திரத்திலும் இந்துதேச சரித்திரம் பெரிது ஏனெனில் மேற்றிசையில் ஒவ்வொரு இடங்களிலும் ஜனங்கள் குடியேறுவதற்கு முன்னரே இத்தேசத்தில் சாதிகள், பதங்கள், அநேக காவ்வியங்கள், சாஸ்திரங்கள், நீதிகள் இவைக

[illegible]

ள்; பலவித முண்டாய் பல வேறுபாடுகளடைந்து சிலது மாறி சிலபுதிதாயும் ஏற்பட்டன வென்பது மிக வெள்ளையாய்த் தெரியத்தக்க சங்கதி பிறகு மேற்றிசையார் பெற்ற மாறுபாட்டில் சிறிது பாகமே இத்தேசத்தார் பெற்றிருக் கிறார்கள் ஆயினும் ஒருவழி பலவித்தியாசங்களு முண்டாயிருக்கின்றன. இப்போது இக்காலத்திலுள்ள பிராமணர்கள் வேதங்களில் சொல்லிய பிராமண இலக்ஷணங்களை முற்றிலும் பெற்றவரல்லர். அவ்விதமே இக்காலத்திலுள்ள க்ஷத்திரியரும் முக்காலத்திலும் இருந்த க்ஷத்திரியரிலும் வேறானவரே அவ்விதமிருந்தும் அவ்வச்சாதியாரென வழங்குவது இக்காலத் திலுண்டு அவ்விதமே இச்சாதி யென்னும் சொல்லுக்குக் குலம், கோத்திரம், வர்ணம், பிரவரம், சரணம், யென்னும் பற்பல சப்தங்கள் பரியாயங்களு ண்டு. இந்துதேசத்தில் உள்ள சில வித்துவான்கள் சாதியைப் பற்றிய ஆசாரங்களும் அங்கந்த மதங்களைச் சேர்ந்தனவெனவும், மற்றுஞ்சிலர் மதமும் சாதியும் முற்றிலும் வேறுபட்டனதெனறும் இருவகைப் பட்டு சித்தாந்தம் செய்திருக்கிறார்கள். நெடுங்காலமாய் நிலைபெற்று வரும் மது இந்து மதத்திற்கு முக்கியமாய் பிரமாணங் களாயுள்ளது வேதங்களென்பது சம்சய மில்லை. மற்ற கிரந்தங்களும் மனுமுதலியோரியற்றிய ஸ்மிருதிகளும், பலவகை சாஸ்திரங்களும், இதிகாசங்களும், புராணங்களும் எல்லாம் வேதத்துடன் விரோதிக்காவிடில் பிராமணமாகுபென்பதே ஒப்புக் கொள்ளத்தக்க தாகவும் வேதங்களே நமக்குப் பிரத்தியக்ஷமாய் சுகங்களைக் கொடுக்கத்தக்கதெனவும், மற்றக் கிரந்தங்கள் ஸ்மிருதி களெனவும் மகரிஷிகளால் சொல்லப்பட்டன வெனவும் அடுத்தப் பிராமணங்களெனவும் விவகரிக்கப் படுகின்றன. வேதங்களோ தனக்குத் தாமே பிரமாணங் களெனவும் ஒரு புருஷனால் இயற்றப்பட்டன வல்லன வெனவும், அனாதிகளெனவும், நிலைநாட்டுவேதற்காகப் பற்பல சாஸ்திரங்கள் பலராலெழுதப்பட்டு உலாவி வருகின்றன. இக்காலத்திலோ வேதத்தைக் கற்கு மந்தணரும் தாமதின் பொருட்களை நன்கு ஆராயாது மனு முதலியோ ரியற்றின தர்ம சாஸ்திரங்களையும் ஸ்மிருதிகளையும் தற்கம் முதலிய சாஸ்திரங்களையும் பற்பல புராணங்களையும் சைவமுதலிய தந்திரங்களையும் பயின்று வருகிறார்கள். வேதத்தின் பொருள் களை நன்றாய் ஆராய்ந்தவர் களேனும் அவர்கள் வேதமே முக்கிய பிரமாணமென்றும் ஒப்புக்கொள்ளுகின்றனர். அவ்விதமே தர்ம சாஸ்திரம் யெழுதிய மனு தாம் எழுதிய தர்மங்கள்வேதத்தை மூலமாய்க் கொண்டன வாதலால் பிரமாணமாகுதல் கூடுமென்றார் "வேதமனைத்தும் தர்மத்தின் மூலம் அதை அறிந்தோர் ஆசாரமும் வசனமும் அங்ஙனமே,, என்று மற்றொரு விடத்திலும்,, "பிதுருக்கள், தேவர்கள், மனுஷர்கள் இவர்களுக்கு வேதமே அழியாத கண். இவ்வேதசாஸ்திரம் ஒருவனால் உண்டுபண்ணக் கூடாதும் அளவிடக் கூடாதும் யென்பது துணிபு. வேதத்தின் விருத்தமான யெவ்வித ஸ்மிருதிகளும் எவ்வித குதர்க்கங்களும் அஞ்ஞானத்தைக் கொடுத்து பாவங்களுக்குமிடமாக்குமாதலால் அவைகள் பயனற்றவை இவ்வேதம் தவிர உண்டாவது அழிவது என யிருவகைத் தன்மைகளையுடைய எவ்வித கிரந்தங்களும் பிற்காலத்திலுண்டாயின வென்றும் பயனற்வவை யென்றும் பொய்யாயின வென்றும் அறிக. நான்கு வர்ணங்களும், மூன்று லோகங்களும் முற்றிலும் வே

[illegible]" இதி

[illegible]

ற்றுமையடைந்த நான்கு ஆசிரமங்களும் இரந்தகாலம், நிகழ்காலம், வருங்காலமென முக்காலங்களும் அவையெல்லாம் வேதத்தால்தானே வெளிவந்தன. சப்தம், ரூபம், ரசம், கிரந்தம் இவைகளெல்லாம் வேதத்திற்றானே தோன்றின. உலகத்திற் பிறந்த ஒவ்வொரு உயிருக்கும் மோட்சத்திற்கு அந்தரங்க சாதனமாயும் சமஸ்த பூதங்களையும் நிலைபெறச் செய்வதும்அழிவற்ற இவ்வேதசாஸ்திரமே. இவ்வேத சாஸ்திரத்தைக் கற்றவன் சேனைக்குநாயகனுயிருத்தல் தண்டனுதி காரியாயிருத்தல், இவ்வுலகத்திற் செங்கோல் தாங்குதல், அல்லது எல்லா உலகங்களுக்கும் ஒரேநாயகனு யிருத்தல்இவைகளுக் கெல்லாம் யோக்கியனுவன். பெருத்த அக்கினியானது ஈரமுள்ள மரங்களையும் கொளுத்துவது போல் வேதத்தை யறிந்த மனிதன் தன் தொழிலால் தனக்குண்டாகும் குற்றங்களைத் தானே திருத்திக்கொள்வான் இவ்வேதசாஸ்திரத்தின்பொருளின் உண்மையையறிந்த ஒருவன் எவ்வித ஆச்சிரமத்தி லிருந்த போதிலும் இவ்வுலகிலிருந்தே மோட்சம் பெறுவான் என்றும்,, இவ்தமே மற்ற சாஸதிரங்களும் ஒரேவழி நின்று வேதம்பிரமாணமென்பது ஒப்பியே வெளிவந்தன. வேதாந்தத்திலும் "சாஸ்திர காரணமாதலால்,, என்கிற சூத்திரத்தால் பருத்ததும் அனேக வித்தைகளால் பிரபலப் பட்டதும் ஒளிபோல எல்லா வஸதுக்களையும்விளக்குவதும்சர்வசக்தனுய பரமாத்மாவுக்குஒப்பானதுமான இருக்குவேதம்முதலிய சாஸதிரங்களைப் பிரமாணமாய்க்கொண்டேஇவ்வுலகத்தைத் தோற்றிவைப்பதும் ஆள்வதும அழிப்பதுமான பரப்பிரம்ம வஸது வெளிபாகின்றதெனத் துணியப்பட்டது. நியாயசாஸதிர வாதிகளும் பரமேசுரனது திருவாக்காதலால் வேதவாக்கியங்க ளனைத்தும் பிரமாணங்களே யென்று நிலைநாட்டினுர்கள். வைசேஷிகர்கள், சாங்கியர்கள், மற்றுமுள்ளவேறு சித்தாந்திகள்,எல்லோரும் வேதம் பிரமாணமென ஒப்பியே வெளிவந்தார்கள். எக்காலத்தில் ரிஷிகள் பற்பலநூல்களை இயற்றினரோ அப்பொழுது இவ்வேதங்கள் நன்ருய்ப் பொருளுடன் எல்லோராலும் அரியப் பட்டிருந்தன பிறகு சமீப காலத்தில் தர்மசாஸதிரங்கள் புராணங்கள் முதலிய கிரந்தங்களையே படிக்கத் தொடங்கிய அந்தணர்கள் வேதம் முற்றிலும் படிக்காதும் அதின் பொருளை நன்கறியாதும் விட்டனா. ஆயினும் எவ்வளவு அவர்களுக்கு அறிவின்மையோ அவ்வளவு பலமாய் ஒரு குருட்டு நமபிக்கைஉண்டாயிற்று கிறிஸதவம் முதலிய தற்கால மதங்களை சித்தாந்தப் படுத்த முயன்ற மற்றவர்களுடன் விவாதம் நேரிடுங்கால் யுக்தி விரோதம் நேரிடில் அது வேத விருத்தமென நிராகிரிப்பது ஒரு வழக்கம் மனுமுதலியோரியற்றிய தர்ம சாஸதிரங்களும் புராணங்களும்மற்ற நூல்களும் ஆங்கிலேய வித்துவான்களால் வெகு பிரயாசத்துடன் சேர்க்கட்பட்டு முன்னரே வெளியிடப் பட்டன. அதுகொண்டு அவைகளைப்பிரமாண மாய்எடுத்து நாமுதகரிக்குங்கால் அவைகளின் உண்மையை ஆங்கிலேயரு மறிய வல்லவராயினர். வேதமோ ஹிந்துக்கள் ஐரோப்பியர்கள் இவ்விருவர்களாலும் முன் முற்றிலும் அரியப் படவில்லை. அதுகொண்டு தர்மசாஸ்திரங்களில் சொல்லப்பட்ட ஒவ்வொரு தர்மங்களும் வேதங்களி லுள்ளனவே என்று இந்துக்கள் எடுத்துரைப்பாரேல் ஆங்கிலேயர்கள் அக்காலத்தில் வாயடக்கிக்கொண்

[illegible]

டிருப்பதே வழக்கமாய் நின்றது. கிறிஸ்துவமத முதலிய எல்லா மதங்களுடைய சித்தார்த்தங்களும் நமது வேதாந்தத்தின் ஒவ்வொரு பாகங்களெனவே- நமது வைதிகர்கள் சொல்லிவந்தார்கள். அவ்விதம் இவர்கள் வார்த்தையில் நம்பிக்கை யற்ற ஆங்கிலேயர் புத்தகங்களைப் பார்க்க விரும்பில். பரிசுத்தமானஎமது வேத புஸ்தகங்கள் நாஸ்திகர்களும் மிலேச்சருமான உங்களுக்குக் காண்பிக்கத் தக்கன வல்லவென்று வேரிற் கோடாலி வெகுவாய்ச் செலுத்தினர். பிறகு சோம்பலற்று விடாமுயற்சி கொண்டு நெடுங்காலமாய் நிலைபெற்று வந்த ஹிந்துமதத்தின் உண்மையைப் பற்றி விரும்பிய ஆங்கிலேயர் இவ்விந்து தேசத்தின் அரசாக்ஷியைக் கொண்ட தம்மினத்தார் பேருதவியால் வேதக்கிரந்தங்களை பாஷியங்களுடன் சேர்த்துச் சோதித்து அச்சிட்டு வெளியிட்டனர். வைதிக பண்டிதர்களும் அவைகூடல் குறைவு அற்றனவெனவும், வேறு ஒரு வகைக்குற்றமற்றென வெனவும்பராபட்சமின்றி ஒபுக்கொள்ளுகின்றனர்-

அந்தோ! இதயாது மானுஷிக்தநின் விபரீதம்! கங்கை, யமுனை, சரஸ்வதி, சிந்து முதலிய நதிகளின் கரையேறி நன்கு வேதங்களை உணர்ந்து நாத்திகத்தை ஒழித்து இப்புவியில் தேவர்கள் எனப் பெயர்கொண்ட அந்தணர்களும் ஏதோ ஒரு தீவத்தில் கோமாம்சத்தைப் புசிக்கும் மிலேச்சர் களனச் சொல்லத்தக்க ஓர் ஜாதியார் அச்சிட்டனுப்பிய தமது வேத புத்தகங்களை சிரத்தையுடன் படித்துவருகின்றனர்.

இவ்விதம் இக்காலத்தில் வேதக்கிரந்தங்கள் எங்கும்சுலபமாய்க் கிடைக்கின்றன. ஆதலால் அவைகளில் மனுமுதலியோர்எடுத்தெழுதியசாதிகளைக் குறித்துஏதேனும்கூறப்பட்டுளதோ இல்லையோவென ஓர்ஆசங்கை நிகழின்சம்சய மிலலாமலில்லைன நாற்பதுவருட காலமாய் நமது வேதங்களில்பரிச்சியமடைந்த ஆங்கிலேய பண்டிதர் கோமான் மாக்ஸ்முல்லர் என்பவர்பிரத்தியுத்தர மளித்தார். காலக்கிரமத்தால் உண்டாகி வரும்கீழும் மேலுமாயுள்ள சாதிகளுக்குள் தன் சாதி மேலென்றும் பிறர் சாதி கீழென்றும் பிராமணசாதியாரே உயர்ந்ததொழிலுக்கு ஏற்ற வரென்றும் மற்ற எல்லா நீசத்தொழில்களும் சூத்திரஜாதியாருக்கே உள்ளன வென்றும் வேத மந்திரங்களில் ஓரிடத்திலும் காணப்படவில்லை. வெவ்வேறு விதமாயுள்ள ஜனங்களுடன் கூட வசிப்பதாவது, கூடப் போசனம் செய்வதாவது இவற்றை விலக்கும் வசனங்கள், வேதங்களிற்காணோம். மற்றொரு சாதியில் விவாகம் செய்யக் கூடாதென்றாவது அப்பேற்கொற்ற விவாகத்திற் பிறந்த சந்ததிகளுக்குப் பதிதத்தன்மைஉண்டென்றும் வேதங்களிலோரிடத்திலும் எடுத்துரைக்கப்படவில்லை. பிற்காலத்தி லுண்டாயின வென எண்ணத்தக்க வேதங்களாகிய பிரமாணங்களின் வேறானதாயும், முற்காலத்தில்உள்ளனவெனச சொல்லத்தக்க தாயும்உள்ளமந்திரங்களென்னும் பாகங்களில் புருஷசூக்தத்தின் ஒரே சுலோகத்தில் விராட்புருஷனுடைய அவயவங்களாய் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் இவர்கள் குறிக்கப் பட்டிருக்கின்றனர். "எப் புருஷனை அமைத்தனரோ அங்கு எவ்விதம் வேறுபாடுகள் தோன்றின முகம் யாது, கைகள் எவை? தொடைகள் எதுகள்? பாதங்களாகக் கூறுவது எதை?ப்

[illegible]

ராமணன் அவரது முகமாகியினன் அரசன் அவர்களது தோளா க்கப்பட்டான் அவரது துடைகளே வைசியன் பாதங்களினின் று சூத்திரன் பிறந்தான் என்று., இருக்கு வேதத்தில் வேறு ஓர் மந்திரங்களிலும் காணப்படாதிதும் இக்காலத்தவர்பிரயோ கிப்பதுமான சூத்திரன், இராசனியன் முதலிய பதங்கள் இவ் விடம் காணப்படுவதால், மற்ற மந்திரங்களைக் காட்டிலும் இ து சமீபகாலத்திற் பிறந்ததென்று வேதத்தின் காலத்தைப் ப ரீக்ஷிக்க முயன்ற யூரோப் தேசத்து தூரதரிசிகள் மிகச் சாது ரியமாய் வெளியிட்டனர். அந்த யுக்திகளை ஒப்புக்கொள்ளா வி டினும் மனு முதலியோர் சொன்ன சாதி நியமங்களை எடுத்துக காட்டச் சாதகமாயுள்ள வசனங்கள் ஏதேனும் கிடைக்குமேல் அப்பொழுது சாதி மதத்தினங்கமென்றும் வேதத்தில் ஒப்பு க்கொள்ளப் பட்டனவென்றும். சொல்லும் வார்த்தை யுக்திக் கொத்துவரும் ஆராயுங்கால் சாதியானது வேதத்தின் ஆஞ்ஞை யிலடங்கிய தல்ல சாதியைக் கடந்தாலும் வேதத்திற் சொல் லிய தர்மத்தைக் கிடந்ததாலுண்டான பாவம் உண்டாகாதெ ன வெகு சுலபமாய் வேதத்தைப் பிரமாணமென நம்பின இந் து சனங்களைக்குறித்து வெளியிடக் கூடும். சேதுமுதல் இம யமலை காருமுள்ள இவ்விந்து தேசத்தில் ஆங்காங்கு பற்பல வழிகளாய் வெளிவந்து ஓங்கிவந்த இச்சாதி நியமம் சில புரு ஷர்களால் ஏற்படுத்தப்பட்டனவையே. எவர்களதினால் அதிகப் பிரயோசனத்தை அடைந்தவரோ அவரே இச்சாதிகளை ஏற்ப டுத்திவைத்தனர். வேதவிருத்தமான பல ஆசாரங்களைப் போ ல இந்த சாதி யாசாரமும் நீடித்தகாலமாய் சனங்களால்ஆத ரிக்கப்பட்டு வருகின்றது. ஆயினும் இது வேதத்திலுள்ளதல் ல நானூறு வருடங்களுக்கு முன் கிறிஸ்து வேதத்தைப் பிர மாணமாய்க் கொண்ட யூரோப் தேசத்தார் அனுட்டித்துவந் த பல ஆசாரங்கள் வெவ்வேறு விதமாயிருந்தன. அவர்கள் அக்காலத்து வேதத்தைப்படிக்காது தமது புரோகிதர்கள்சொ ல்லும் வார்த்தைகளையெல்லாம் நம்பி யாதொருதடையின்றி அனுட்டித்து வந்தனர். பிறகு அதைச் சீர்திருத்த பெத்தனம் செய்த சிலர் தமது வேதத்தைத் தாம்கற்றுணர்ந்து தமது சுவப்பிரயோசனத்திற்காக புரோகிதர்கள் கற்பித்தனவும்பி றர்களை பீடிக்கத்தக்கனவுமான ஆசாரங்களைத்தமது வேதத்தி லில்லையென நன்றாய் வெளியிட்டு சனங்களுக்கு ஓர்பெரியஉ பகாரத்தைச் செய்தனர். அவ்விதம் சர்வப் பிரமாணங்களிலு ம் சிறந்ததுமான வேதத்தைப்படித்து அதிற் சொல்லாததது ம் நாகரீகத்துக்கு விரோதமானதும் நடுக்காலங் களிலுண்டா னதுமான சாதிஆசாரங்களை ஒழிக்கச் சிலலோகோபகாரிகளா ன தீரர்கள் இப்பொழுது பாடு படுகின்றனர். தமது புருஷ ன்காலஞ் சென்றால் விருப்பமில்லா விடினும், அவனுடன் அவனது மனைவியை வைத்துக்கொளுத்தும் ஓர் கொடிய ஆ சாரம் அப்பேர்க்கொற்ற வர்களால் தான் இவ்விடத்திலொழி ந்தது. பால் மணம் மாராத குழந்தைகளுக்கு பெருமணக்கோ லம் செய்வதும் விதிவசத்தால் மணமகனிறந்தால் மறுமணம் கூடாதென்றும் யாதும் வேதங்களுற் காணேம் ஆதலாலும் அ தை ஆதரிக்கத்தக்க தல்லவென அவைகளை ஒழிக்கஆங்காங்கு வெகு புத்திமான்கள் பிரயாசம் எடுத்துக் கொண்டு வருகின்ற

[illegible]

[illegible]

னர். சிலவிடங்களில் அவரது முயற்சி பயன்படவும் காண்கி றேம்.

வரும்.

குதர்க்காசலகுலிசத்திற்கு விடை

ஓர்வைகாநஸர் பின்வருமாறு எழுதுகிருர்-

ஸ்ரீமான் ஸ்ரீநிவாசசாஸ்திரிகளவர்களென ப் பெயர் தாங்கிக்கவி களின் மணியாய் நமது நண்பர்களின் தலைவராகிய தம்மால் அனுப்பப்பட்டதும் அடிமுதல் முடி வரையில் ஆனந்திக்கத்தக்கதும், சுவர்ணலங்காரம் பெற்றதும் மிருதுவான பதவின்னியாசம் அமைந்ததும் நல்ல சரித்திரத்தை உடையதும், சுத்தமானதும் தமதுள்ளதை பரமாத்மாவினிடத்தில் நிறுத்தியதும் வித்துவான்கள் கண்டு ஆனந்திக்கத்தக்கதும் லோகோபகாரயாய் வெளிவந்ததுமான பத்திரிகையைக்கண்டு ஆனந்தமடைந்தேன்; அதின் ரசத்தைப் பலருக்கூட்டியும் வருகிறேன். நான் இங்கு எழுதும் ஒரு சிறுவிண்ணப்பம் குற்றமற்றதேல் தமது பத்திரிகையின் ஓர்மூலையில் வெளியிடக் கேட்டுக்கொள்ளுகிறேன். அவற்றிற் குற்றமுள்ளதேல் பெரியோர்கள் பொறுத்தருள்வார்கள். மற்றவர்கள் பொறாமை நமக்கு யாதும் தீங்கும் விளைவிக்காதுதமது பத்திரிகையை விடாமற்படித்து, அதின் பொருளை அறிந்து ஆனந்திக்கும் நான் முதிர்ந்த முந்திரிப்பழம்போல் மெதுவான "குதர்க்காசலகுலிசம்,, என்னும் சில டதங்களைக் கண்டேன். வெகு களிப்புடன் மெல் சில வரிகளைப்படித்துச் சென்றேன்- "லிங்கரூபியென்று தொடங்கிய என்னை உபாசிக் கின்றனர்,, என்பது வரையிலுள்ள வசனங்களைப் பார்த்து அதின் வெளிப்படையான பொருளைக் கவர்ந்த எனது உள்ளத்தில் தோன்றினது யாதெனில் அந்தோ! கஷ்டம் இவ்விதம்பிரத்தியக்ஷமாய் வேதத்திற்றனே யிருக்க அவைகளைககவனியாது வைஷ்ணவர்களெனப் பெயர்கொண்ட சிலர் அவர்களுக் குத்தெய்வமான ஸ்ரீமன் நாராயணனே விபூதி உருத்திராட்சங்களைத் தரித்திருக்க இவர்களேன் திருமண் காப்புத் திருத்துளாய் மாலைகளை அணிந்திருக்கிருர் களென்பது- பிறகுசிறிது தாமதித்து மனதைத் திடப்படுத்தி அந்த வேதவாக்கியங்களைப் படித்தேன். அவ்விடத்தில்கைகூப்பி வழிபடுகின்றூர்என்றே இருக்கிறது. விபூதி உருத்திராக்ஷங்களைத் தரித்ததாய்க் காணேம் விபூதி உருத்திராக்ஷங்களை தரித்துள்ளன உருத்திர கணங்களென்றும் வெளியாகின்றது மேலும் "எல்லோரும் திருநீறணிந்து திருக்கண்மணிமாலை பூண்டு கைகூப்பி நிற்கின்றூர்,, என்பதால் ஸ்ரீமன் நாராயணரும் அவ்விதம் இருக்கக் கூடாதோவெனில் கூடாது எல்லோரும் கைகூப்பி நிற்கின்றூர் என்பதால் தானே விஷ்ணுவுக்கும் அத்தன்மை சித்திக்கு மாதலால் அதை மறுபடியும் சொல்லியிருக்க முன் சொன்னபடி திருநீறு முதலிய வற்றையும் திரும்பி எடுத்துச் சொல்லவேண்டியது அவசியமல்லவா? மேலும் திருநீற்றின் மகிமையை எடுத்துக் காட்டக் கங்கணம் பூண்ட இவ்வேதவாக்கியத்தில் ஒருவழி திருநீறணிதல் திருமாலுக் கெடுத்துரைக்கப்பட்டிருப்பினும் அதுகொண்டு நான் திருப்தி அடைந்தேனில்லை. அதுகொண்டு

[illegible]

கருணைக் கடலான கல்விமான்கள் ஸ்ரீமன் நாராயணனுக்கு திருநீறு தரித்தல் உண்டென்பதற்கு தக்க பிரமாணமான வேதவாக்கியங்களை எடுத்து வெளியிடுவாரேல் அதைக்கேட்க மிக ஆவலுள்ளவனாயிருக்கிறேன். மேலும் இந்திரன் முதலியோருடன் கூட பரிவார தேவதைகளில் ஒருவராய் சிவனைவழிபடும் விஷ்ணுவுக்கு திருநீறு முதலியன உளதேனும்சாக்ஷாத் லக்ஷ்மி நாதனான பரமனுக்கும் திருநீறு முதலியவை தரிக்குந்தன்மை உளதென எவ்விதம் சொல்லலாம் தனது தெய்வத்தின் அடையாளங்களை அவரது தொண்டர்களணிந்து வருவது வழக்கமே. அதுகொண்டே அனேக சுருதிகளிலும்- புராணங்களிலும்- முக்கியமாய் எந்தத் தேவதையைத் தோத்திரம் செய்யத்தக்க வசனங்களுள்ளனவோ அவ்விடங்களில் அப்பரிவாரத்தேவதைகளுக்கு முக்கிய தேவதையின் அடையாளங்களைகுறிப்பது கண்டோம்- வேறு விடங்களில் நாராயணனே எல்லாவற்றிற்கும் காரணப் பொருளென்றும், அனைத்திற்குமந் தறியாமி யென்றும் எல்லோராலும் வழிபடததக்கவனென்றுமவெளியிட்டுவரும் வேதங்களிவ்விடமப் பரமன்பரமசிவனை உபாசிக்கும் பரிவாரத் தேவதைகளில் ஒருவரென்றும், அவர் திருநீறு முதலியவற்றை தரிக்கிருரென்றும் சொல்லுமானுல் வேறென்னவிந்தைஇந்த விஷ்ணுவும்விபூதியைத் தரிக்கின்ருரென சொல்லாது எவ்விதம் விபூதியை வேதம் டசமும் ஆகையால் இவ்வேத வசனமே அர்த்தவாதமாதலால், ஸ்ரீமன் நாராயணனுக்கு விபூதி தாரணமில்லையென நம்பிய நாம் அதை விவரிக்க எழுந்த வசனங்களை எவ்விதம் ஆதரிப்போம் இது நிற்க- மேலும் பார்த்தேன் "கோபங்கொண்ட ரகுநாதனை தியானம் செய்து,, என்று தொடங்கிய வசனம் மந்திர கல்பத்தில் நாம் முன்கண்டதே அவ்விடத்தில் சத்துருக்களை நிக்கிரகம் செய்ய எத்தனித்த ஓர் சாதகன் தியானம் செய்யத்தக்க ஓர் உருவம் அதென்று எழுதப்பட்டிருக்குறது- உபாசகர்கள் தாம் விரும்பி அப்பயனைத் தரத்தக்க சுருபத்தைத்தியானம் செய்யவேண்டிய தென்பதே மந்திர கல்பத்தின் ரகசியம் ஆதலால் சர்வதேவ சுவரூபியான ஸ்ரீமன் நாராயணனுடைய திருஅவதாரமான ஸ்ரீராமன் ராவணசம்மாரம்செய்யும் சமயத்தில் ருத்திராம்சமாயுள்ள முற்கூறிய ரூபத்தைத் தரித்ததாய் அவ்வசனத்தால் விளங்கினும் எப்பொழுதும் அவர் தரிப்பது திருநீறென எவ்விதம் ஒவ்வும் அவ்விதம் சொன்னல் கோபமும்எக்காலத்துமவர்க்கு உளதாகுமல்லவா? இதைவிட்டு மேலும் சிலவரிகளைக்கண்டேன் அவ்விடத்தில் அத்யாத்ம ராமாயணத்தில் சூர்ப்பணகை ஸ்ரீராமனைக் கண்ட சங்கதியைக் குறிக்கும் சிலசுலோகங்களை எழுதியிருந்தது- அப்பெரும் காவியத்தைச் செய்த கவி வால்மீகிராமாயணத்தில் ஓர் இடமும் காணுத ஸ்ரீராமபத்திரனுக்கு தனது ஆசாரத்திற் கேற்ப விபூதி தாரணத்தை எழுதியதைக்கண்டு அவருக் கோர் வந்தனமளித்தேன்- அதுகொண்டு அத்தியாத்ம ராமாயணத்தை எழுதிய கவிசைவாத்வீதி என்றும் நன்ருயறிந்தேன் இந்த அத்தியாத்ம ராமாயண வசனத்தைக் கொண்டே பவபூதிஎன்னும் ஓர் மகாகவி ஸ்ரீமானுக்கு விபூதி தாரணத்தை வெளியிட்டார் என்றும் நம்புகிறேன் மேலும் பவனுடைய (சிவனுடைய) பூ

[illegible]

தி போன்ற பூதி (திருநீறு) கொண்டவனெவனோ அவனென ப்பொருள்படும் பவபூதி எனப்பெயர் தாங்கிய அக்கவி எவ் விதம் சைவரல்லவரென்று சொல்லக்கூடும் இவ்விதங்களா ல் மனதைத் திடப்படுத்தி ஸ்ரீமான் வாசுதேவருக்கு உபமன்னி யமகரிஷிஉபதேசித்து அருளிய சாம்பதீக்ஷையைக் குறித்து மகாபாரதத்திற் சொல்லியிருப்பதை எடுத்துக்காட்டியிருப்ப தையுங் கண்டேன்- அவ்விதம் இருக்கக்கூடும்- க்ஷத்திரியரா சப்பிறந்த உலகத்திற் செல்லாம் முதற் குருவனுகிய ஸ்ரீவாசு தேவனுக்கு சாந்தீபினி மகரிஷியைக் குருவாயும், வாசுதேவ ரைத் தகப்பனுயும், சொல்லுவதுபோல் எதோ ஒரு காரணத் தால் உபமன்னுவை சைவதீக்ஷா குருவாயும் சொல்லக்கூடும் அதுகொண்டு அவர் எப்பொழுதும் திருநீறு அணிந்தாரென்று அவ்விதம் எண்ணலாம். அவ்விருவரும் திருநீறணியும் சிவன டியார்களாவரேல், ஸ்ரீவைகானசம் பாஞ்சராத்திரம் முதலி ய ஆகமங்களிலும், சிற்பசாஸதிரங்களிலும், ஸ்ரீராமர் ஸ்ரீகி ருஷ்ணர் முதலியவர்கள் பிரகாரணத்தில் அவர்கள் திருநீற ணிந்த சங்கதி எடுத்துக் காட்டவேண்டியதல்லவா? அவ்வித ம் காணப்படவில்லையே, அதற்கு நேர் விரோதமாய் ஊர்த்தவ புண்டரமும் வனமாலையும் அல்லவோ சொல்லப்பட்டிருக் கி றது அவ்விதமே பழைய பிம்பங்களிலும், வனமாலை ஊர்த்த வ புண்டரமும் காணப்படுகிறது. அவ்விதமே சாஸ்திரங்களை அறியாத சிற்பிகளும், பழையகாலத்து ஆசாரத்தை அனுசரி த்துப் படங்களில் எழுதுகின்றனர். மேலும் ராமன், கிருஷ் ணன் முதலியவர்களுக்குத் தாங்கள் எடுத்துரைத்தபடி விபூதி உருத்திராக்ஷங்கள் இருக்குமேல் அம்மூர்த்திகளை வழிபடும்ம ற்றவரும் அவ்விதமே திருநீறு முதலியவற்றை அணியவேண் டியிருக்க அவர்களுக்குத் திருமண் காப்பும் திருத்துளாய் மா லையும் மந்திர கற்பங்களில கூறியிருப்பது யாது காரணம் பற் றியோ அறிகிலேன். ஸ்ரீராமனை உபாசிக்கும் வழியை, எடுத் துக்காட்டப் புகுந்த அகஸ்திய சம்ஹிதை என்னும் கிரந்தத் தில் "திருநீராடி திருமண் தரித்து,, என்று தொடங்கிய வச னத்தால், அவர்களுக்குத் திருமண் காப்புத் திருத்துளாய் மா லை என ஏற்பட்ட தல்லவா? அவ்விதமே ஸ்ரீகண்ணபிரான் வ ழிபாட்டை எடுத்து ஓதப்புகுந்த கிரமதீபிகைஎன்கிறபழை ய புஸ்தகத்தில் "நாரதர் முதலிய முனிவர்கள் அருளிச்செய் த ஸ்ரீமன் நாராயணனது வழிபாட்டை விரிப்பாம்,, என்று தொடங்கி "திருநீராடித் துய்யவெண்மை பொருந்திய உ டைகளை உடுத்தி, கால் கைசமுவி ஆசமன்னியம் செய்து, கை யில் பவித்திரம் பூண்டு வெண்மை பொருந்திய திருமண்காப் பைத் தரித்து, கிழக்குநோக்கிப் பத்மாசனம் என்கிற ஓர்வ கை ஆசனத்தில் உட்கார்ந்து மனத்திடத்துடன் தமது குருக் களையும், கணநாயகனையும், கைகூப்பித் தொழுவானாக,, என் று நன்ருய் முற் கூறியபடி ஊர்த்தவ புண்டரம் சொல்லப்பட வில்லையா? இந்த வாக்கியம் எவனோ ஒரு வைணவன் எழுதி னனென எண்ணக்கூடாது- அவனே கணேசுவரனை வழிபடு ம் படி எடுத்துரைத்தானாதலால் நடுநிலைமையிலுள்ள ஓர் வி த்துவானென்றும், மந்திர சாஸதிரத்தின் சாரத்தை எடுத்து இச்சிரந்தம் எழுதினனென்றும், வெளியாகின்றது. மே

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

லும் சநத்குமாரசம்ஹிதை முதலிய மந்திர கற்பங்களிலும், பகவன் மூர்த்திக்கிச் சந்தனம் முதலிய வற்றால் ஊர்த்தவபுண்டரம் சொல்லப் பட்டிருக்கிறது. மேலும்," எத்தேவதையை எவன் வழிபடினும், அத்தெய்வத்தின் அடையாளத்தை அவன் தரிக்கவேண்டுமென்பது,, எங்குமுள்ளதோ வெனில் முற்கூறிய வேதத்தில்தானே எல்லோரும்திருநீறு, திருக்கண் மணிமாலை முதலிய வற்றை அணிந்திருக்கிறாரென்று பெரப்பட்ட வசனங்களால்சிவனைவழிபடும் எனையஇத்தேவர்களுக்குத்திருநீறு முதலிய வற்றைப்பற்றிச் சொன்ன சங்கதியே போருமானசாட்சி யமாயிருக்குமல்லவா? இனிச் சொல்லிற் பெருகும்இவ்வளவும் யாம் எழுதியது ஊர்த்துவ புண்டரத்தில் உள்ளபட்சபாதத்தாலல்ல. ஸ்ரீமன் நாராயணனுக்குத் திருநீறு முதலியவை உண்டென்பதற்குத் தக்க பிரமாணங்களை அறியவே ஆதலால் கருணைக்கடலான அவ்வைணவர் நாராயணன் திருநீறணிந்தாரென் பதற்குத் தாம் சில சுருதிகளை எழுதுவதாய்ச் சொன்னபடி எழுதுவாரேல், அவைகளைக்கேட்க மிக ஆனந்தமுள்ள வனுப் இருக்கிறேன்- பரமான்மாவாகிய வாசுதேவனுக்குத் திருமண்காப்பு முதலியவைஉண்டென்பதற்குப் பிரமாணங்கள் எண்ணிருந்தன வாகையால், அவைகளை எடுத்தெழுத ஏன் மனம் துணியவில்லை. "நாடறிந்த அந்தணர்க்குப் பூணூலும் வேண்டுமோ,, என்றபடி அது எழுத வேண்டியது அவசியமில்லை அல்லவா? மேலும் ஸ்ரீமத் பகவத்பாத சங்கராசாரிய சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய விஷ்ணுபாதாதிவர்ணன ஸ்தோத்திரத்தில் அப்பரமனது திருமுகமண்டலத்தில் எவ்விதம் அடையாளம் வர்ணிக்கப் பட்டிருக்கிறதோ அவையறிஞர்கள் அறிவாரல்லவா?

ப்ரம்மவித்தியா

மதமும், அதின் பிரயோசனமும், அதின் ஆசிரியரும்-

[முன்தொடர்ச்சி]

சுரேச்வராசாரியர் சரித்திரம்

நர்மதையின் கரையில் மாஹிஷ்மதி என்னும் ஓர் நகரம் உண்டு. அவ்விடத்தில் ஹிமமித்திரனென்கிற ஓர் பிராமணன் இருந்தான். அவ்வந்தணன் மணிக்கி நற்குணங்களுக்கெல்லாம் ஒரு இடமாய் ஓர் குமாரன் பிறந்தான். ஹிமமித்திரனும்பிறந்த குழந்தைக்குவிச்வ ரூபமெனத்திருநாம மிட்டான்.அவரையே பெரியோர்கள மண்டனமிச்சிரரென்றும், சுரேச்வராசாரியர் என்றும் சோல்வது. அவ்விச்வரூபர் சொற்பகாலத்தில் தமது தந்தையரால்வேத நெறிவழுவாது அந்தணர்களுக்குரிய சில சமஸ்காரங்களைப் பெற்று, இளமையிலே சில சத்குருக்களுடைய கிருபையால், வேதம், வேதாங்கம், ஸ்மிருதி, புராணம், இதிஹாசம், மற்ற எல்லா வித்தைகளிலும், நல்ல பயிற்சி யடைந்து பல திக்குகளிலும் தமது புகழ் பரவிவர வசித்துவந்தனர். அவருக்கு யௌவனம் உண்டான் பிறகு தமக்குத் தக்க ஓர் பெண் மணியை விமாகம் செய்யக் கருதி மனதுச் சங்கையோடி ருக்குங்கால், சோணம் என்கிற நதியின் கரையில் விஷ்ணு மித்திரரென்னும் பிராமணனுக்கு ஓர்

[illegible]

பெண் குழந்தை யிருப்பதாயும், அவளது நற்குணங்களையும், நற்செய்கைகளையும், ரூபம், லாவண்ணிய முதலிய வற்றையும் சரசவாணி என்னும்அக்கோதையனது பெயருக் கிணங்க அவளது கல்வித்திறமையையும், அநேக அந்தணர்கள் முகத்தால் கேட்டு அவ்வந்தணரின் மகளை தான் விவாகம் செய்ய சிந்தித்து அக்காரியம் மிகக்கடின மாதலால், சிலகாலம் மன முருகி நின்றார்; அக்கோதையரும் தனக்குத் தகுந்த கல்விப்பயிற்சியும், ரூபமும், நற்குணமுமுள்ள ஓர் நாயகன் கிடைப்ப திரிதென்பது எண்ணி மனமுருகி நிற்குங்கால், சில பிராமணர் முகமாய் ஹிமமித்திரரென்பவர் குமாரரான விச்வரூபரென்பவருடைய நற்குணங்களையும், நல்லொழுக்கங்களையும், மற்றெல்லோரும் வியக்கத்தக்கக்கல்வியின் வல்லமையையும், கேட்டுபரமேசுவரனது திருவருளால் இவரேநமக்கு மணவாளனாகவேண்டுமென எண்ணங்கொண்டனள். இவ்விருவரும் மனவருத்தத்தயல்அடையும்ஓர் நிலைமையை அறிந்து தந்தைகள் அவர்களுடைய உள்ளம் இன்னதெனத் துணிந்து தமது குலம், சீலம், சம்பத்து, இவைகட்கு அநுரூபமாயுள்ளதே என வியந்துஒருவருக்கொருவர் அவரவர் பந்துக்களுடன் கலந்து மனிதர்கள் சிலரை அனுப்பி திருமண நிச்சயம் செய்து கல்யாண முகூர்த்தத்தைச் சிறப்பாய் நடத்த அவரவரது பந்துக்களையும், சிநேகிதர்களையும், கூட்டி எல்லோரும்-ஆனந்திக்கத் தக்க சுபலக்கினத்தில் தமது குழந்தைகளுக்கு மனமகிழத் திருமணக்கோலம் நடத்தினர். அவ்விதம் பெரியோர்களாசி கூறதம் முள்ளம் களித்துத் தழைக்க அத்தம்பதிகள் மாகிஷ்மதி நகரஞ்சென்று உலகத்தார் எல்லோரும் புகழத்தக்க இல்லற வாழ்க்கையை அடைந்து இருவரும் ஒரே மனதாய் தமது இரண்டாவது ஆசிரமத்தின் தர்மங்களை நடத்தி வந்தனர். பிறகு அவரவர் பெரியோர்காலஞ் செல்ல ஸ்ரீவிச்வரூபரென்பவர் ஸ்ரீஜைமினி மகரிஷியையும், ஸ்ரீமத் வேதவ் வியாஸாசாரியரையும் நிமந்திரணம் செய்து ஒருக்கால் சிரார்த்தம் நடத்தி வந்தனர் அக்காலத்தில் தமது ஆசாரியனது ஆஞ்ஞைக்கடங்கி திக்விஜயம செய்ய உத்தேசித்து ஆங்காங்கு பிரசங்கித்து வரும்ஸ்ரீமத் பகவத்பாத சங்கராசாரியஸ்வாமிகளவர்கள் மார்க்கத்தில் பட்டபாதாசாரியரைக்கண்டு அவர்முகமாய் மண்டனாசாரியருடைய கல்வியைக் கேட்டு வியந்து அவரை ஜயிக்கக் கருதி,மாகிஷ்மதி நகரம் சென்று அவரதுகிரகம் கதவுதாளட்டிருத்தலால், தாம்யோகவித்தையினால் ஆகாசமார்க்கத்தில் தமதுடலைச் செலுத்தி மண்டனாசாரியவர்களுடைய கிரகத்தில் வர அக்காலம் சிரார்த்த காலத்தில் சந்நியாசிகளைக் காணக்கூடாதென்றெண்ணி இவரைக் கோபித்த அவ்விச்வரூபாசாரியரைப்பார்த்து அங்கு வந்திருக்கும் ஜைமினி மகரிஷியும் வாதராயணாசாரியரும் இவரது பெருமையைச் சிலது எடுத்துக்கூற உடனே அம்முனிவர் மணியை அவ்விச்வரூபர் திருவமுதுக்கழைக்க அவ்வாசாரிய சிகாமணியும், தாம்வாதபிட்சையே வேண்டுமெனக் கேட்க அவ்விதம் தடையில்லை என ஒப்புக்கொண்டு அவ்விச்வரூபாசாரியர், தொடங்கிய வேலையை முடித்து கர்மகாண்டத்தின் பெருமையை விரிக்க உத்தேசித்து ஞானகாண்டத்தின் பெருமையை உரு வெடுத்துநதெ

[illegible]

னச்சொல்லத்தக்க ஸ்ரீமத் சங்கராசாரிய ஸ்வாமிகளை ஜயிக்க எண்ணங்கொண்டு விவாதம் செய்யத்தொடங்கினர். பிறகு எல்லாவித கல்வி வழிகளையும் சற்றுணர்ந்த கல்விக்களஞ்சிய மாய மண்டனாசாரியரது மனைவியை மத்தியஸ்தமாக்கி தோல்வியடைந்தவர் மற்றவர் ஆச்சிரமத்தை அடைவதெனப் பந்தயங்கொண்டு விவாதத்தை நடத்திவந்தனர். அவ்விவாதம் நடக்குங்கால் அச்சரசவாணியென்னும் தேவியார் இவ்விவேருக்கு விவாதத்தின் தாரதம்மிய மறிய அவர்களிடம் இரண்டு மாலைகளை அளித்து எவர்கழுத்து மாலைவாட்டமடைகின்றதோ? அவரதே பாரஜயமென, சொல்லி தமதுவீட்டு வேலைகளைப் பார்த்துவந்தனர். அவர்களும்ஐந்தாறுதினங்கள் விவாதம் செய்து வந்தனர். பிறகு ஒரு தினம் மண்டனாசாரிய சுவாமிகளது கழுத்துமாலை வாடியிருப்பதைக் கண்டு தமது புருஷன் தோல்வியடைந்தாரென நிச்சயித்து இருவரையும் சந்நியாசிகளாக எண்ணி அவ்வம்மையார் பிக்ஷைக்கெழுந்தருளுக என்றுரைக்க தாமடைந்த தோல்வியை நிச்சயிதது தாம் கிரம சந்நியாசம் அடையக் கருதி எழுந்த தமது மணவாளனையுங் கண்டு உடனே அவ்வாசாரிய மணியை நோக்கித் தாம் துர்வாஸ ரிஷியின் சாபத்தால் பூமியில் வந்த சரஸ்வதியென்றும் ஒம்மைப்பார்க்குமளவே எனது சாபத்தடைஎன்றும் இனி நான் சத்திய லோகம் செல்வேன் என்றும்சொல்லி ஆகாச மார்க்கத்தில் எழுந்த அத்தேவியரை ஆசாரியசுவாமிகள் வனதுர்க்கா மந்திரத்தால் தடைசெய்து னது நாயகன் ஸ்தானத்தில் நீயிருந்து விவாதம் செய்யென ஆஞ்ஞைசெய்ய எவ்விதமேனும் எக்கலையிலேனும் இவரை ஜயிக்க உத்தேசித்துப் பல நூல்களில் விவாதம் செய்து அவரைஜயிக்கமுடியாது இளந்துறவியான இம்மகானுக்குக்கலைநூல்களில் பரிசயம் குன்றுமெனக்கருதி அவைகளின் விவாதத்தைத்தொடங்க, ஆசாரியர்களும் சிறிது காலஞ் சழித்து வருவதாய் அவ்விடம் விட்டுப் புறப்பட்டு பரகாயப் பிரவேச வித்தையால் அமருகனென்னும் அரசன் உடலிற் புகுந்து அநேக மாதர்களை மணந்து கலைநூலின் கரை கண்டு அவ்விடம் விட்டுத் திரும்பவும் அத்தேவியரிடம் சென்று அகலையிலு மவரைவென்று அங்கிருந்து துங்கபத்திரையின் கரையிலுள்ள சிங்கேரியிற் சென்று ஆங்கோர் யந்திரத்தில் அச்சரஸ்வதி தேவியரை ஸ்தாபித்தனர். பிறகு தமது நவீன சிஷ்யராய மண்டனாசாரியரைகிரம சந்நியாசம் பெறுவித்து தம்மிடம் தமது ஆசாரியரின் வழியாய் வந்த சந்திர மௌளீச்வரலிங்கத்தையும் ரத்தின கர்ப்பம் என்னும் கணபதியையும் பூஜிக்கும் படி ஆஞ்ஞைசெய்து அச்சிங்கேரி பீடத்திலே இருந்து கொண்டுசேது தொட்டு இமைய மலை காருமுள்ள ஒவ்வொரு வர்ணஸ்தர்களையும், அவரவர் நெறி தவறாது நடத்திவரும்படி சுவதந்திரம் கொடுத்து சுரேச்வராசாரியரென யோகப்பட்டமளித்து தாமும் சிலகாலம் அவ்விடமிருந்தார். பிறகு அச்சுரேச்வராசாரியர் ஆசாரியரிடம் பெற்ற ஆஞ்ஞைக்கிணங்க அத்வைதிகளுக்குப் பிராணம் போன்றதும் வேதாந்த வார்த்திகமெனவும், ப்ரம்மவித்தியா வார்த்திகவும்மென வழங்கும் ஓர் கிரந்தத்தையும் செய்தருளினர். அந்தக் கிரந்தத்தைச்

[illegible]

[illegible]

செய்தது கொண்டே அவரை வார்த்திக காரரென வழங்குவது அதே காரணமாய் அவர் அத்வைத மதாசாரியருள் இரண்டாவது ஆசாரியராயினர். மேலும், நைஷ்கர்மிய சித்திமுதலிய பல கிரந்தங்களும், அத்வைத சித்தாந்தத்தை அனுசரித்து இவர் எழுதியதுண்டு. அவைகள் பலவிடங்களில் வழங்கி வருகின்றன. பல காரணங்களால் இவர் வெகு காலம் உயிரோடிருந்தனரென்று தெரிய வருகிறது. இவருடைய வாசஸ்தானப்பிங்கேரி பத்மபாதாசாரியார் முதலியோ சரித்திரம் பின்வரும்.

ஸம்ஸ்கிருதபாஷை புராணம்

(தொடர்ச்சி)

சிவ புராணங்கள் பலவிதமாய்க் காணப்படுகின்றன; அவற்றுள் முதலில் மகபுராணங்களில் ஒன்றானதும், ஸ்ரீமகாபாகவதத்தில் சொல்லியபடி இருபதது நாலாயிரக்கிரந்தங்களோடு கூடியதும், பதினொரு சம்ஹிதை உள்ளதும், சிவ மகாபுராணமெனப் பெயர் பெற்றதாகிய ஓர்புராணத்தைச் சுருக்கி அதிலுள்ள விஷயங்களை இவ்விடம் எழுதுவாம். அப்புராணத்தில் பலஸம்ஹிதைகளில் பல உபநிஷத்துகளுக்கு அர்த்தங்களும், பல மந்திரங்களின் உத்தாரணங்களும், ஆங்காங்கு விரிவாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன; அதின் ஓர் பாகமானவாயுஸம்ஹிதை என்னும் ஓர் பாகத்தில், பாசம், பசு, பதி, இவர்களின் ஸ்வரூபத்தைக் காட்டக்கருதி, முதலில் நாஸ்திகத்தை பல யுக்திகளால் வேர்களைந்து பிறகு, பரமான்மாவின் உண்மைமைநன்றாய் வெளியிடப்பட்டிருக்கின்றது. அதர்வசிரஸ், அதர்வ சிகை இவ்விரண்டு உபநிடதங்களும் பொருள் படுத்தப்பட்டன. அவ்விதமே ச்வேதாச்வரதம், கைவல்லியம், ஜாபாலம், மாண்டுக்கியம், பிரச்னம் முதலிய பல உபநிடதங்கள் வியாக்கியானம் செய்யப்பட்டன. சிருஷ்டியின் கிரமம், திக்பாலகர்களின் ஸ்வரூபம், இவை எழுதப்பட்டன. அவ்விதமே சிவாகமங்களும் அவற்றுள் வைதிகம், அவைதிகம் என்கிற வேறுபாடுகளும், நான்கு விதமான தீக்ஷைகளும், அவற்றுள் உண்மையும், பரமசிவ பூசையின் வழியும், தியானக்கிரமும் என்கிற பல விஷயங்கள் குற்றமற்றனவாய் விளங்கி வருகி வருகின்றன. நாம் முற் கூறியபடியே இப்புராணத்திலும் எல்லோரும் கேட்டுக் களிக்கத்தக்க பல விஷயங்களுண்டு.

வரும்.

ஆத்மாவும், சரீரமும்.

இவ்விஷயத்தைக் குறித்து நாம் தொடர்ந்து வருகிறோமல்லவா? அதுவிஷயத்தில் பிற கூறிய பல குற்றங்களை நாமிதின் முறையில் எடுத்து மறுத்தோம். அவ்வாதிகளும் நாம்மறுத்தெழுதிய தற்கு, யாதும் பிரதி யுத்தரம் எழுதவில்லை; ஆயினும் சில வாரங்களுக்குமுன் அவ்வாதிகளால் நடத்தப்படும் "தத்துவவிவேசினி,, பத்திரிகையில் நாம் கண்டசில வசனங்களுக்குப் பிரத்தி யுத்தரம் சொல்வது அவசிய மாதலால், அதற்கென இப்பொழுது கையில் இறகு எடுத்தோம். அவற்றுள் "பிராணன்என்பது சரீரத்தில் நிறைந்த ஓர்வகை வாயுஎன்

[illegible]

[பொருள்]

[illegible]

[சிவண்டு]

[illegible]

[எளிதம்]

[illegible]

[எளிதம்]

[illegible]

று நாம் எடுத்தெழுதிய உபந்யாசத்தில் ஓர் குற்றத்தைக் காட்ட உத்தேசித்த நமது நண்பர் சரீரத்தினின்று அபானம் வெளிப்படுமேல், பிராணபலம் எவ்வளவு குறையுமோ? என்று கேட்டதற்கு நாம் அப்போழுது அக்குறைவு வெளிக்காற்றுள் செல்வதால் நிறையுமென எழுதியதைக கண்டு, பிறகு நீர் சொன்ன இலக்கணத்திற்கு வெளிவாயுக்களில் அதிவ்வியாத்தி வருமென சங்கிக்கின்றார்; ஐயா,—சரீரத்தில நிறைந்த ஓர்வாயு என்பதற்குச் சரீரத்தில் உண்டான ஒரு வாயுவே என்று அறிந்தார்போலும்ம், நமது அபிப்பிராயமும் அப்படிப்பட்டதல்ல. அதைக்கேட்ட மற்றவரும் அவ்விதம் பொருள் கொள்ளார். எதுவரையில் சரீரத்துள் இருக்கின்றதோ? அக்காலமே அதற்குப் பிராணன் என்கிற பேருண்டு என்பதே அவ்வாக்கியத்தின் கருத்து. அது கொண்டே ஆகாயம் வாயு இவைகளில் பிராணி என்கிற பெயரும் விவகாரமும் இல்லை. இவர்கொண்ட வழி வெளியிலும் பிராணவாயு இருக்குமேல் அவ்விடத்திலும் பிராணிஎன்கிற விவகாரம் ஒத்துவருமல்லவா? மேலும், சில ஆங்கிலேயர் பரிபாஷா நாமங்களுக்கு சம்ஸ்கிருதத்தில் பரியாய நாமங்களிருக்குமேல் அவைகளைஎழுதவேண்டுமென ஆரம்பித்து ஓர் புஸ்தகத்தையுங் குறித்து அதில் முதல் பாகத்திலுள்ள பரிபாஷாநாமங்களுக்குப்பதிலெழுதும்படிகேட்டார்- அது விஷயம் இப்பொழுது அவ்வளவு அனுவசியம் என்றும், இவர் அபூர்வமாய் எண்ணும் ஒவ்வொருபதங்களைக் குறிப்பிட்டுக் கேட்டால் அதற்குப் பதில் சொல்ல வேண்டியது அவசியம் தான் என்றும் நாம் எண்ணுகிறோம். மேலும், ரஸாயன சாஸ்திரங்களில் சொல்லிய சகல விஷயங்களையும் எடுத்துக்காட்ட வல்லவர்கள் உண்டென்று நாம் எழுதியதைக்கண்டு அவைகளைப் பத்திரிகையின் வாயிலாக எடுத்துக்காட்டும்படி கேட்கிறார். சங்கீதம், சாரீரம், ரஸாயனம் முதலியசாஸ்திரங்களைப் படிப்பதைக் காட்டிலும், காட்டவே வேண்டுமென்றும், இவை பிரத்தியக்ஷ சாஸ்திரங்கள் என்றும், அவ்விதமே இப்பொழுதும் பாடசாலைகளிலும் பிரத்தியக்ஷமாய் ஒவ்வொரு சங்கதியும் செய்துகாட்டுவதும், இவர் அறிந்திருப்பாரே. நமது முன்னோர்களும், "பிரத்திக்ஷ தரிசனம் சாஸ்திர தரிசனம் இரண்டும் கூடினாலன்றி அறிவுநிலைபெறாது என்று எழுதியிருக்கிறார்கள். அவ்விதமே ஜீவனது ஸ்வரூப அறிவிற்கும் மற்ற அறிவிற்கும் வேற்றுமை இன்னதென நாம் தெளிவாய் எழுதியிருக்க அதைக் கவனியாது ஜீவன் ஞான ரூபனென்றும், ஞானத்தின் இடமென்றும், முன் பின் விரோதமாய் எழுதியிருப்பதாய் எடுத்துக் காட்டினார். சமுத்திரம் ஜலரூபமென்றும், ஜலத்திற்கு இடம் என்றும், வழங்குவதால் குற்ற முண்டென யாம் கருதினோமில்லை.

நிற்க; நாம் எழுதிய பதார்த்தம் என்குற பதத்தில்வெறுப்புற்று பதார்த்தம் என்பது திரவியம் முதலிய ஒன்பதும் அடங்கிய தென்றும் பொருள் என்கிற பதம் அப்பொருள் கொடுக்குமா என்றும் கூறி இதைப்பார்த்து பரிகசிக்க மற்றவரையும் அழைத்தார். நாம் அதற்குப் பதிலாய் அவரையே நோக்கிக் கேழ்ப்போம்; ஓ! தார்க்கிக சிகாமணியே!! தாம் படித்த தர்க்க நூலில் உள்ள பதார்த்தம் என்கிற பதத்திற்குத் தமிழில் பிரதிபதம் யாது? நாம் பதத்தின் அர்த்தம் பதார்த்தமென‌க்கொண்டு அவ்விதம் சொல்வதே நியாயமெனக் கொண்டோம்-

[illegible] [பொருள்] [illegible]

[illegible] !

[illegible]

மேலும் சுவாசத்தின் அளவை (12) அங்குலம் என்றால்காலம் வரையறுக்க மாட்டாத புத்திமான் இவர் என்றார். அது விஷயம் அனுவசியமேனும் அடிக்கடி கேட்கிறார் ஆதலால் யோகிகள் நிச்சயித்தபடி ஓர் விகடிகைக்கு (5ம் 2-ம் 36-ல்- 31-பங்கும்) உள்ள சுவாசமென்று ஒரு சுவாசம் (12) அங்குலவேகம் என்றும் சொன்னால் ஒரு சுவாசத்தின் காலம் இங்கிலீஷ கணக்கால் $\left\{4\frac{23}{211}\right\}$ சகிண்டுகள் என்று ஏற்படுகிறது- கடைசியில் நமது நண்பர் விஷயங்களை (ஏளிதம்) செய்கிறோம் அடிக்கடி அவரை பரிகாஸம் செய்வதில்லை என்றார். இது கொண்டே இவர் தன் வாய் கொண்டேதான் எப்பொழுதும் பரிகசிப்பது தமக்கு வாடிக்கையாய் ஒப்பினதுமல்லாமல், இப்பொழுது விஷயங்களை ஏதோ செய்வதாய் எழுதினரே என அப்பதத்தை தமிழ் அகராதி முழுதும் பார்த்தும் கிடைக்கவில்லை. இவர் பூராவாக நம்பிய இங்கிலீஷிலும் இல்லை என்று கேட்டறிந்தோம். இவர் பகைகொண்ட ஸம்ஸ்கிருதத்திலும் கண்டிலோம். அவரே எடுத்துரைப்பார் என்று எதிர் பார்க்கிறோம். இது நாம் எழுதி [பொருள்] என்னும் பதம் போன்றதல்ல. வாயினும் வெகு காலம் ஆலோசித்து இப்பொழுதும் பரிகாசம் செய்வதே தனமாகக் கொண்டவராதலால் இப்பதத்திற்கும் அதுவே பொருளாமெனத் துணிந்தோம். அப்பதத்தின் உண்மையான பொருள் அவரே பிரமாணத்துடன் விள்க்குவாராக.

ஸ்மார்த்தப்பிராமணர் உட்பிரிவின் காரணம்

ஐயா!! நமது தேசத்திலுள்ள வருணங்கள் நான்கும் அநாதி என்பதற்குப் போதுமான காரணங்கள் ஜாதியைக்குறித்து இப்பத்திரிகை தொடங்கி ஸ்ரீமத் வஞ்சிநாட்டின் மேன்மை தாங்கிய மகாராணியவர்களின் மணவாளனாகிய ஸ்ரீமத் கேரளவர்மபூபாலர் திருவாய் மலர்ந்தருளிய உபன்னியாஸம் வருகிறபடியால் அதுவிஷயம் முடிந்தபிறகு எடுத்துக்காட்டுவோம். முதலில் ஸ்மார்த்தப்பிராமணர்களின் உட்பிரிவைக் குறித்து சிறிது எழுதுவோம். இப்பொழுது வழங்கிவரும் சிலநிபந்தனைக் கிரந்தங்களில், ஆரியாவர்த்தம் என்கிற [விந்தியமலையின் வடபுறம்] தேசத்தில் உள்ளவர் பஞ்ச [5] கௌடர்கள் என்று தென்னாட்டிலுள்ளவர் பஞ்ச [5] திராவிடர்கள் என்றும் இருவகை பேதங்கள் சொல்லப்பட்டு பிராமணர்களில் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. மற்றுபல விதபேதங்களை அவ்வத்தேசங்களின் வேறுபட்ட வேஷம் பாஷை. மதம் முதலியவற்றாலுண்டாயினவேன அறிகிறோம் எங்ஙனமெனில், முன் இத்தேசத்தில் சிலசிற்றரசர்கள் அடிக்கடி படையெடுத்து வருவதால் பயந்து ஓடுவதே தொழிலாய்க்கொண்ட சிலர் தாம் பெண்களைக்கொடுக்கவும், வாங்கவும், ஒருவர்க்கொருவர் மூன்று தலைமுறைகள் அறிந்திருக்க வேண்டும் என்கிற விஷயம் ஸ்மிருதிகளின் கருத்தாதலால் அதற்காக அக்காலம் ஒருவரை ஒருவர் அறிந்தவர் சிலபெயர்களை ஏற்படுத்திக் கொண்டார்கள். சிலர் தேசங்களைப்பொறுத்தும் [சோழியாள் வடமாள் சோளதேசம்வடமாள் மாத்தியமாள்] சிலர் சூத்திரங்களைப் பொறுத்தும் [ஹிரண்ணியகேசியாள்] சிலர் கூட்டங்களைப்பொறுத்தும், மற்றும் தமது தொழில்களைப்பற்றியும், சிலர் தாம் கொண்டவேதபாகங்களைப் பற்றியும் பலவிதமாயுள்ளன. பிறகு இவர்களுள் இவர்கள் சேர்ந்த இடத்தைப்பொறுத்து பலபெயர்கள் ஏற்பட்டன என்றே துணிவுகொள்வோம். இப்பொழுதும் இவர்கள் கன்னியாதானம் ஓர்சங்கதிதவிர மற்றய விஷயங்களில் ஒன்றுபட்டு ஒருவருடன் மற்றொருவன் பந்தியில்சேர்ந்து போஜனம் பண்ணவும், ஒருவருக்

[illegible]

இதி. ரா- ஹாலாஸ்யநாதஶாஸ்த்ரீ

வேதஶாஸ்த்ரதரங்கிணீபாடஶாலா

[illegible]

கொருவர் தானமசெய்யவும், நிமந்திரணம் செய்யஎல்லாவித மும் செய்து வருகிருர்கள்- இவர்கள் கன்னியாதானம் மாத்திரம் செய்யக்கூடாதெனமறுத்தும், சாஸ்திரம் எங்குள்ளதோ அறியேம்- அவ்விதம் எந்தத்தேசத்திலாவது மற்ற எந்தக்கிரந்தத்திலாவது இருக்குமேல் அதைஎடுத்துக் காட்டும் பெரியோர்களுக்கு நாம் செய்யும் வர்தனங்கள் அனேகமாயிருக்கும் இப்பத்திரிகையின் வாயிலாக நான் அதைக்கேழ் விரும்பிஅவரதுகனத்தைப் பிரார்த்திக்கிறேன். ஸ்மிருதிகளில் ஜாதி யென்கிறபதம் வருணம் யென்கிற பதத்தின் பரியாயமாகவேபிரயோகிக்கப்படுகிறது- ஆதலால் கௌடர் திராவிடர்இவ்விருவரும் வேறுமதங்கொண்ட இருவரும் சம்பந்தித்தல் மாத்திரையில் நிபந்தனைக் கிரந்தங்களில் இடம் கொடுக்கவில்லையென்று எமதுகருத்து ஐந்து திராவிடர்களுள் ஒவ்வொருவர்க்கும் பாஷைமுதலிய பலவேறுபாடுகள் இருப்பதால் ஒவ்வாதென்றேநம்புகிறேம்- அவ்விதம்ஐந்து கௌடர்களிலும் ஒருவருக்கொருவர் இக்காலத்தில் சோளதேசம் வடதேசம் என்கிற வடமர்கள்ளுட்பிரிவு பலவிடங்களில் சிதைந்தது- இவ்விதம் மற்றவகுப்புகளிலும் சிலர் ஒன்றுசேர்ந்தேவருகிருர்கள். இவ்விதப்பெயர்களே ஸ்மிருதிகளிற் காணேம். அங்ஙனமிருக்க; இவர்கள் கொள்வனை குடுப்பனையில் தோஷம் ஏது? பிராயச்சித்தவார்த்தைதான் எங்ஙனம் ஒவ்வும்- ஆதலால்ஒரேவேஷம் ஒரேபாஷை ஒரேமதம் கொண்டவருள் கன்னிகளைக் கொடுப்பதும் வாங்குவதும் ஓர்வித தோஷத்திற்கும், இடந்தராதென நமது துணிவு- இதர்குவிரோதமாய் ஸ்மிருதிகளில் உள்ளபிரபலநிஷேதவசனங்களைக் காண்பிக்க நமது சுதேச பாஷாபண்டிதர்களைக்கேட்டுக் கொள்ளுகிறேன்-

ஹாலாசியநாதசாஸ்திரி.

மொழிபெயற்பு.

வேதசாஸ்திரதரங்கிணிபாடசாலை-

ஐயா,—இப்பெயர்கொண்ட பாடசாலை இவ்வூரில் இருப்பதாய் முன்யெழுதினேம் அல்லவா? அப்பாடசாலையை நகரத்துச்செட்டிகளுள் ஒருவரான ரா-ம-சு ருமஞ்செட்டியார் இன்னகரில் ஸ்தாபித்தார். இக்காலத்தில் எங்கும் இங்கிலீஷ்பாஷைபெருக அதையே அரசரும் ஆதரிக்க ஆங்கிலேயர் பிரீதியே ஆனந்தமெனக் கொள்ளத்தான் கஷ்டப்பட்டுத்தேடிய பொருளை இப்பன்மைய பாஷாமணியின் விஷயம் செலவிட முயன்ற இவரைப்போல வேறுமனிதர் அகப்படுவது அரிதிலுமரிது. பிள்ளைகள் தன் குழந்தைகளைப்போல் போஷிக்கிருர்கள் இவ்விடம் வேண்டுவதொன்று இப்பாஷைக்குப் பாக்கியமிருப்பினும் அம்மகானுக்கு இப்பிள்ளைகளைப் பண்டிதராக்க விருப்பமிருந்தாலும், இத்தனிகர் பலவித்துவான்களுடன் கூடி ஆலோசிக்கவேண்டும் பலஏற்பாடுகளை அமைக்கவேண்டும் அதேயப்பாஷையின்பாக்கியம்- அந்தோ! ஓரிடம் தனம்ஓரிடம் தர்மசிந்தை, ஓரிடப்படிப்பு, ஓரிடம் பகுத்தறிவு இவைகள் சேர்வது ஈசன் செயல்- இப்பொழுது இந்நகருக்கு வந்திருக்கும் ஷெ செட்டியாரவர்கள் வீணாரம்பங்களை விட்டு புதுவழிபடிந்த புலவருடன் கலந்து பாடசாலையை விருத்திக்குக் கொண்டுவரும்படி அவருக்குப் பரமேசுவரன் அருள்புரிவாராக.

கு-ஸ்ரீ

யிருக்கப்படுமோ? பாதிரிகள், பதினாயிரம் மயில் தூரமிருந்து லக்ஷம் லக்ஷமாய்க் கொண்டு வந்து எல்லோரும் கிறிஸ்தவராக்க, மதவிருத்தியின் பொருட்டு எத்தனையோ லக்ஷம் ஆஸ்தியாக வைக்கப்பட்ட மடத்தில் குருமார், தமக்குரிய அக்காரியங்களை உள்ளூரிலிருந்து பண்டிதரைக் கொண்டும் செய்யாது வாளாவிருப்பதைப் பற்றிக் கேட்க வேண்டுவது நம்மனோர் கடமையன்றோ? மடத்தார் அங்ஙனம் புரியாவிடில் அம்மடம் யிருத்தலினால் பயன்யாதோ? இவ்விஷயத்தில் நம்மவர்க்கு என்று கோபமூளுமோ, என்று உரோஷம் வருமோ, என்று பேடித்தன்மை ஒழியுமோ, என்று ஆண்மைபெறுவரோ? அன்றுதான் இந்துதேசம் நல்ல நிலைமையில் வந்து மதம்செழிப்படையும்-

பாதிரிமார், எத்தனை ஸ்கூல்களை வைத்துப் பரிபாலிக்கின்றனர்? அவ்வாறு நம்ம மடத்தார் அங்கங்கு ஸ்கூல்களை ஏன் வைக்கப்படாது? சம்பளமும் கவர்ன்மெண்டையும் கொண்டு நடத்தலாமே; இரண்டொருவர் ஒருவர் பின் ஒருவராய்எங்கும் ஆரம்பிப்பார்களே; இப்படி நம்மவர் எங்கும் செய்ய ஏற்பட்டுவிட்டால் பாதிரிமார் சகிக்கக் கூடாத வுஷ்ண பூமியை விட்டு, தம் குளிர்ந்த பூமியில் சென்று சுகப்படுவார்களே; இப்படிச் செய்யாமையாலன்று அவர் இத்தேசத்தில் கால் வைக்கலாயிற்று?

பாசுசெய்து வேலையில்லாது சும்மா யிருக்கும் அனேகர் ஸ்கூல்களை வைத்து, கல்வியும் கற்பித்து மதத்தையும்போதித்து தாமும் ஜீவிக்கலாமே; மடத்தாரும பிரபுக்களும் இப்படிப்பட்டவரைக்கொண்டு வெகு வேலை நடத்தலாமே; பெரியமடத்தார் யிப்படிப்பட்ட வேலைக்கு ஆரம்பித்தார்களாயின், அனேகர் பண உதவியும் செய்வார்களே! செல்வாக்கும், அந்தஸ்தும், நம்பிக்கையும், கல்வியும், நுட்பபுத்தியுமுள்ள வரெல்லாம் பரோபகார சிந்தையின்றிச் சும்மாவிருந்து விட்டால், யாதொன்றுமில்லா எம்போன்ற ஏழைகள் என்னசெய்வார்கள்? இவ்விஷயத்தில் தக்கவர் மனமிரங்கவேண்டும்; உபகாரம் புரியவேண்டும்; நாவசைந்தால் நாடசையத்தக்கவரெல்லாம்தமக்கென்ன வென்றிருக்கப்படாது; பாதிரிகள் செய்யும் மோசம் மெத்தபெரியது; அதைக்கவனிப்பாரில்லை; யாரெப்படிப்போனாலும் நமக்கென்ன,, என்னும் இம்மொழி பண்டிதரிடத்தும் பாமரரிடத்து மிருப்பதோடு செல்வரிடத்தும் தரித்திரரிடத்தும் சம்பூர்ணமாய்க் குடிகொண்டிருக்கிறது- இம்மொழி யித்தேசத்தை நாசம் செய்ய வந்த பீரங்கியாகும்- இப்பழமொழி நமது நாட்டைவிட்டு என்று ஒழியுமோ, அன்றுதான் நாம் எவ்வாற்றானும் சீர்படுவோம்- இதுகல்வியாலும், பத்திரிகைகளாலும், சபைகளாலும், ஐக்கியத்தாலுமன்றி மற்றொன்றாலும் ஒழியாது-

கிறிஸ்துமதம், நமது புராணங்களிலிருந்து எழுதியதென்பது பிரத்தியக்ஷமாயிருப்பதுடன், பலஐரோப்பியரும், அமெரிக்கரும், புத்தகம் பத்திரிகை பிரசங்கம் இவற்றின் வழியாய் பறையடிக்கவும், அவற்றையெல்லாம் துடைத்துவிட்டு மகம்மேருமலையான இந்துமதத்தைத் தூஷித்து, இந்துக்களைக்கிறிஸ்தவராக்குவது எவ்வளவு நியாயம்? ஒருபக்கத்தில் கண்டிக்கின் மற்றொருபக்கம் புறங்காட்டும் ஓடும் போதகரை, நம்மவர் வெல்ல வெகு கல்விவேண்டுமோ? ஆயிரம் யிடத்தில்மானங்கெட்டாலும் அதை லக்ஷியஞ் செய்யாமல் எப்படியாவது சொக்குப் பொடி போட்டுக் கிறிஸ்தவராக்குகின்றமைக்குக் காரணம் பொருள், பூவை, ருசி யிவைதான- மற்றப்படி பைபிலில் என்ன விருக்கிறது? மிஷன்ஸ்கூலில் கற்கும் நமது சிறுவரைக் கேட்டால் வெட்ட வெளிச்சந்தான்- கடவுள், முதல் நாளில் வெளிச்சத்தையும் மூன்றாம் நாளில் சூரிய சந்திர நக்ஷத்திரங்களையும் படைத்ததையும், உலகம்உண்டாகக்கடவதென்று கூறும்போதே வாயும், வாயுள்ள போதே சரீரமும், சரீரமுள்ள போதே அதன் காரணமான வுலகமுமிருக்கவும் மீண்டும் உலகம் உண்டான அதிசயமும், விலங்கு பறவை முதலியவற்றிற்கு ஆத்துமா யில்லை என்ற விநோதமும்மற்றும்இவை போன்ற அற்புதங்களை யெடுத்துக் கூற எவராலாகும்? பராபரன் தான் வரவேண்டும் போலும். பேஷ்! பேஷ்!! இந்துமதத்தை வெல்வது இதுதான், பி- எ- க்களே! பாருங்கள்! பாருங்கள்!!

மதம் அழியவும், இந்துதேசம் தரித்திரப்பட்டு வாடவும்பார்த்திருப்பது கருணையுடையார்க்குஅழகாமோ? பரோபகாரமாமோ? இந்துநேசர்களே! இதைப்பன் முறையுங் கூறியதாகப்பாவித்து இனி வாளாவிராது தக்கவாறு யோசித்து, விரைவில்நன்மை செய்யுங்கள்! மறவாதேயுங்கள்! உங்களபிப்பிராயத்தைத் தெரிவியுங்கள்!

ஓர் நிருபநேசன்-

கையொப்பவரவு

பெயர்	ஊர்	ரூ	அ
அ- சபாபதி சிவாசாரியார்	பார்வதீபுரம்	க	கஉ
வெங்கிட்டராமய்யர்	மாயவரம்	க	கஉ
பவானி பண்டிதர்	சேலம்	க	அ
எ- சி- முருகேசமுதலியார்	ஷை	க	கஉ
டி- எ- அனந்தராமய்யர்	திருநெல்வேலி	க	கஉ
நஞ்சுண்டசெட்டியார்	கிருஷ்ணகிரி	க	கஉ
வி- வைத்திநாதைய்யர்	சேலம்	க	கஉ
பி- வெங்கிடகிரி ஐய்யர்	ஷை	க	0
பி- வெங்கிடசாமி நாயிடு	ஷை	க	கஉ
பி- டி- சுப்பிரமணிய அய்யர்	ஷை	க	கஉ
வைத்தினாதய்யர்	சின்ன சேலம்	க	கஉ
வி- எக்கியராமஐய்யர்		க	கஉ
என்-வீராசாமிஐய்யர்	ஷை	க	கஉ
என்- வி- சீனிவாசய்யங்கார்	ஷை	க	கஉ
என்- ராமசாமிஐய்யர்	ஷை	க	கஉ
வெங்கிடாசாரியார்	ஷை	க	கஉ
சி- வெங்கிடாசாரியார்	,,	க	கஉ
சாமிஐய்யங்கார்	,,	க	கஉ
மீனாக்ஷிசுந்தரமய்யர்	மதுரை	க	கஉ

நாராயணஐய்யர் கோமல்	க	0
ராதாகிருஷ்ணய்யர் திருநெல்வேலி	க	சஉ
கிருஷ்ணய்யர் மாயவரம்	க	0
எம்- எஸ்- ராமச்சந்திர ஐய்யர் பட்டணம்	க	சு
எஸ்- குப்பையர் சேலம்	க	கஉ
டி- சுப்பிரமணிய ஐய்யர் ,,	க	கஉ
ரங்காசாரியார் ,,	க	கஉ
சாமிநாதைய்யர் ,,	க	கஉ
கார்த்திகேச்வரம்பிள்ளை ,,	க	சஉ
ஆர்- குப்பையர் ,,	க	சஉ
சி- பெருமாள் நாடார் ,,	க	கஉ
கே- நாகரத்தினமணிமுதலியார் ,,	க	சஉ
டி- துரைசாமிபிள்ளை வைஞூர்	க	கஉ
பார்த்தசாரதி ஐய்யங்கார் திருநெல்வேலி	க	கஉ
கே- ராமசாமி ஐய்யர் திருப்பத்தூர் சேலம்	க	கஉ
பட்டாபிராமய்யர் ,,	க	கஉ
சி- செங்கல்வராயமுதலியார் ,,	க	கஉ
ஸ்ரீனிவாச ஐய்யங்கார் ,,	க	கஉ
எம்- ரெங்கசாமிஐய்யங்கார் ,,	க	கஉ
காரியதரிசி ஸ்ரீ ரிஷிங்குரும் திருக்கழிக்குன்றம்	க	சஉ
வெங்கிட்டராமய்யர் திருப்பத்தூர் சேலம்	க	சஉ
டி- அருணாசலஐய்யர் ,,	க	கஉ
அர்த்தநாரிஐய்யர் ,,	க	கஉ
திரியாலம்திர்த்தகிரி திரியாலம்	க	ஒஉ
சுப்பராயசெட்டியார் திருப்பத்தூர் சேலம்	க	சஉ
டி- வீர ராகவாசாரியார் ,,	க	கஉ
ஜி- நாராயணசாமிப் பிள்ளை ,,	க	கஉ
எம்- உன்னியரேடிபாலக்காடு	க	கஉ
கே- நாராயண ஐய்யர் பட்டணம்	க	கஉ
ஆர்- வெங்கிடேசய்யர் ,,	க	கஉ
வைத்திலிங்கபிள்ளை ,,	க	கஉ
எம்- சிவராமைய்யர் அரவங்குரிச்சி	க	கஉ
வெங்கிட்டராமைய்யர்க்ஷேத்திரபுரலபுரம்	க	கஉ
நரசிங்கராவ் சித்தூர்	க	கஉ
பி- வெங்கிடேசஐய்யர் ,,	க	கஉ
அப்புசாஸ்திரிகள் கும்பகோணம்	க	கஉ
விஜயராகவாசாரியார் ஆர்க்காடு	க	கஉ
முத்துகோபாலசாமி பிள்ளை புதுவை	க	0
பாஸ்கரகிருஷ்ணைய்யர் பண்ணுருட்டி	க	சஉ
நாகேந்திரகுருக்கள் கொழும்பு	உ	சு
லக்ஷுமணசெட்டியார் புதுச்சேரி	க	கஉ
ராமசாமிமுதலியார் திருக்கோயிலூர்	க	கஉ
சீதாராமஐய்யர் திருநெல்வேலி	க	கஉ
சிவராமஐய்யர் ,,	க	கஉ
கிருஷ்ணசாமி ஐய்யர்	க	0
கல்யாணசுந்தர மைய்யர் தஞ்சை	உ	0
சுந்தரராம ஐய்யர் கும்பகோணம்	க	சஉ
பட்டாபிராம ஐய்யர் ஈரோடு	க	கஉ
கே- குப்புஸ்வாமி ஐய்யங்கார் ,,	க	கஉ
கே- சுப்பிரமணியஐய்யர் ,,	க	கஉ
எஸ்- வி- வெங்கிட சுப்பையர் ,,	க	கஉ
சுப்பிரமணிய ஐய்யர் ,,	க	0
பாலகிருஷ்ணகுருக்கள் கொழும்பு	உ	ச
கிருஷ்ணைய்யர் மாயவரம்	க	கஉ
நரசிம்மஐய்யர் திருவாரூர்	க	கஉ
ஜி- ராமசாமி ஐய்யர் கும்பகோணம்	க	கஉ
சுப்பராமகுருக்கள் கொழும்பு	உ	ச
சுப்பிரமணியகுருக்கள் ,,	உ	ச
சித்- கைலாசபிள்ளை ,,	உ	ச
எஸ்- சுப்பிரமணிய ஐய்யர்	க	சஉ
சுப்பிரமணிய ஐய்யர்	க	0

சந்தாத்தொகையை மணிஆர்டர்மூலமாகவாவது தபால்லேபிலாக ஒருஅணா வட்டம் சேர்த்தாவது இப்பத்திரிகா சாரியருக்கென்றனுப்பவும்.

சிதம்பரம்
ப்ரம்மவித்தியா யந்திரசாலையில்
விற்கப்படும் புத்தகங்கள்.

சர்மிஷ்டாவிஜயம்	,,	ரு	,,
பகவத்கிதார்த்த தீபிகை	ச	,,	,,
ஆச்சரிய தர்ப்பணம்	க	ச	,,
அஷ்டாங்கயோகம்	,,	௬	,,
ஆரியா தண்டகம் } லக்ஷுமிஸ்தோத்திரம் }	,,	க	,,
மகேஸ்வரதண்டகம்	,,	க	,,
சங்கர சரித்திரம்	,,	,,	ரு
ஆத்மாவும், சரீரமும்-	,,	க	,,
சகாதேவசாஸ்திரம்	,,	க	,,
மனுமுறைகண்டவாசகம்	,,	ச	,,
மாதர்நீதி	,,	ரு	,,

சர்வஜித்து வர்ஷத்திய
ரிப்பன் பாக்கெட்பஞ்சாங்கம்

இது பார்த்திபஹு முதல் பிரசுரமாகி, வருகிற சர்வஜித்துவருஷமும் வெளிப்படுத்தப்படும்- இவ்விந்துதேசத்திற்கு அநேகநன்மை செய்து ஜனங்களால்புகழப்பட்ட மாஜி கவர்னர் ஜனரலான லார்ட் ரிப்பன்பிரபுவின் நன்றி அறிதலுக்கு அறிகுறியாக, சீமையிலிருந்து தருவிக்கப்பட்ட அவர் பிரதிபிம்பத் துடன் அவர் போல் அச்சிடப்பட்டு வருகின்றது- இதில் வைதீகலௌகிகங்களுக்குரிய அநேக விஷயங்களிருப்பதால்யாவர்க்குமே ஆவசியகமானது-தேசாபிமானிகளாகமது இந்து நண்பர்கள், "நல்லாரைக்காண்பதுவும் நன்றே,, என்றபடி அப்புருஷோத்தமனைத்தினமும் பல்கால் காணுவதற்குமவாயும்- நன்றியறிதலுக்குக் காரணமாயும் இராநின்ற இப்பஞ்சாங்கத்தை, வருஷந்தோறும் பரிபாலித்து வருவதோடு, தங்கள் தங்கள் நண்பர்களையும் பரிபாலிக்கச்செய்யப் பிரார்த்திக்கின்றனம்- அழகான சீமைப் பென்சலும் கொடுக்கப்படும் 1887-ஹு மார்ச்சுமீ -1உக்குள் வெளியாகும்- பிரதி1-க்கு விலை- அணா -6- தபால்சார்சு -அணா-க- 10க்கு-க ம், 25க்கு 3 ம், 50க்கு 7 ம், 100-க்கு 14 ம் கம்மிஷனுக்குமேலேகொடுக்கப்படும்- 1887- ஜனவரிமீ- 31உக்குள் நூறு பிரதிக்காகப் பணம் கட்டுகிறவர்க்கு 20 மேலே கொடுக்கப்படும்- இந்த ஏற்பாடு வாங்கி விற்பவர்க்காக ஏற்படுத்தியது

அச்சிட்டிருக்கும் புத்தகங்கள்-

மாதர் நீதி-சக்கு அணா-6- தபால்சார்ஜ் அணா- க- மனுமுறைகண்டவாசகம் சக்கு அணா 4- தபால் சார்ஜ் அணா அரை இது சிதம்பரம் இராமலிங்கசுவாமிகளால் எளிய வசன நடையில் இயற்றியது- (இது சிதம்பரம் ப்ரம்மவித்தியா பத்திராதிபரிடமும் கிடைக்கும்)

வேண்டியவர்கள் சென்னை முத்தியாலுபேட்டைத் தம்புசெட்டிவீதி 316-வது நெ- மதராஸ் ரிப்பன்பிரஸ் மானேஜர் கு- சடையாண்டிச் செட்டியார் பேருக்குப் பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்- இதில் வேண்டுவோர் அரை அணாலேபில் அனுப்ப வேண்டும்-

கு- சடையாண்டிசெட்டியார், மானேஜர்